ජනාධිපති ශ්‍රීමත් ආර්. ප්‍රේමදාස මැතිතුමා
1989 සැප්තැම්බර් මස 6 වෙනි දින
ශ්‍රී ලංකා පදනම් ආයතනයේ දී
රජයේ නිලධාරීන් සහ
සංස්ථා සභාපතිවරු අමතා කළ කතාව

அதிமேதகு சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள்
1989 செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி
அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள்,
கூட்டுத்தாபன தலைவர்கள் ஆகியோருக்கு ஆற்றிய உரை.

# Address by His Excellency R. Premadasa, President, to Officers of State at the Sri Lanka Foundation Institute — 6th Sept., '89





BKT 0186
26 | 08 | 2023

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

# කොළඹ ශ්‍රී ලංකා පදනම් ආයතනයේ දී ශ්‍රීමත් ආර්. ප්‍රේමදාස ජනාධිපතිතුමා විසින් 1989 සැප්තැම්බර් මස 06 වැනි දින අමාත්‍යංශ ලේකම්වරුන්, දෙපාර්තමේන්තු ප්‍රධානීන් සහ සංස්ථා සභාපතිවරුන් අමතා කරන ලද කථාව

අපේ රටේ ජනතාව විසින් මේ නව රජය තෝරාපත් කර ගන්නා ලද්දේ මේ වසරේ පෙබරවාරි මාසයේ බව තමුන්නාන්සේලා දන්නවා. ඇත්ත වශයෙන්ම ජනාධිපතිවරණය පවත්වනු ලැබුයේ දෙසැම්බර් මාසයේ දී ය. ජනාධිපතිවරයා වශයෙන් මා දිවුරුම් දුන්නේ ජනවාරි මාසෙ 02 වැනිදා. පෙබරවාරි මාසේ මහ මැතිවරණය පැවැත්වූවාට පස්සේ පාර්ලිමේන්තුව විවෘත කරනු ලැබුයේ මාර්තු මාසයේ දී ය. අයවැය වාර්තා සම්මත කර ගත්තේ ඊටත් පසුවයි. අපේ රජය වැඩ භාරගෙන දැනට මාස හයක් ගතවෙලා කියල කියන්න පුළුවන්.

මේ කාලය තුළදී මා කීපවිටක්ම අමාත්‍යංශවල ලේකම්වරුන් සහ රාජ්‍ය ඇමතිවරුන්ගෙ ලේකම්වරුන් හමුවෙලා තිබෙනවා. ඒ හැර විවිධ අමාත්‍යංශ භාර කැබිනට් ඇමතිවරු ඒ ඒ අමාත්‍යංශ, දෙපාර්තමේන්තු, සංස්ථා, සංවිධාන ප්‍රධානීන් ද හමුවී තිබෙනවා. අප මෙවැනි හමුවීම් ඇති කරන්නේ අපේ පාලන තන්ත්‍රයේ නියමුවන් වන තමුන්නාන්සේලාව, අපේ රජයටත් ජනතාව විසින් දීල තිබෙන වරම ගැන විටින් විට කරුණු පැහැදිලි කරන්න යි. ඒ නිසයි අද අප කල්පනා කළේ දෙපාර්තමේන්තු භාර ව කටයුතු කරන සංස්ථා, සංවිධාන ආයතන භාර ව කටයුතු කරන තමුන්නාන්සේලා හමුවෙන්න. තමුන්නාන්සේලා මාර්ගයෙන් අප බලාපොරොත්තු වෙන්නේ රට පුරාම විසිරී පවතින තමුන්නාන්සේලාගේ අතුරු දෙපාර්තමේන්තු සහ සංවිධානවල නොයෙක් කරුණු ගෙන යන්නයි. ඒ මන්ද, පාලන තන්ත්‍රයේ නියමුවන් රජයේ අරමුණු සහ පරමාර්ථ තේරුම් ගන්න ප්‍රමාණයට යි ඒ අප ඇති කරන වැඩපිළිවෙළවල් සාර්ථක ලෙස ක්‍රියාත්මක කරන්න පුළුවන් වෙන්නේ.

ජනාධිපති හැටියට මමත්, අගමැතිතුමා ඇතුළු ඇමතිවරුත් සලකන්නේ අපේ ජනතාව අපේ ස්වාමිවරු හැටියටයි. ජනසම්මතවාදී පාලන තන්ත්‍රයක තියෙන ඉතා උසස් අංගය තමයි ඒ. ඒකාධිපති පාලන තන්ත්‍රයක තිබෙන අවලක්ෂණය තමයි පාලකයින් ස්වාමිවරුන් ලෙස සැලකීම. එවැනි ක්‍රමයක් යටතේ ස්වාමිවරුන් වන්නෝ පාලකයෝ යි. ජනතාව පාලිතයින් බවට පත් වෙනවා. ජනසම්මතවාදය අනුව අපේ පිළිගැනීම ජනතාව අපේ ස්වාමිවරුන් ලෙසයි.

ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව යටතේ රටේ පාලකයින් පත් කරන්නේ ජනතාව විසිනුයි. ජනාධිපතිවරණය පැවැත්වූයේ සැහෙන දුෂ්කරතා සහ නොයෙකුත් අමාරුකම් මධ්‍යයේ යි. නමුත් ජනතාව ඒ අමාරුකම් මැද තමන්ගේ ඡන්දය පාවිච්චි කළා. ජනාධිපතිවරණයේ දී බොහෝ දෙනෙක් ජීවිත පරිත්‍යාග කරමින් ශාරීරික වද වේදනා විඳිමින් ඡන්ද පොළට ගිහිල්ල ඡන්දෙ පාවිච්චි කළා. ජනාධිපතිවරණයේ දී මේ රටේ ජනතාව සියයට 55 ක් පමණ ඡන්දය පාවිච්චි කළා. මේ ළඟදී මාව හමුවුණු ඇමෙරිකාවේ පාලක මණ්ඩලයේ කෙනෙකුට මම මේක කිව්වම එතුමා කිව්ව, ඇමෙරිකාවේ ජනාධිපති තෝරන විට, ඒ රටේ ජනතාව ඡන්දෙ දීමට එන්නේ ඊට හුඟාක් අඩුවෙන් කියල. ඒ රටේ ඡන්දය පාවිච්චි කරන්නේ 45% ක් 48% ක් කියලයි එතුමා කිව්වේ. නමුත් මෙච්චර දුෂ්කරතාවන් තිබෙද්දීත් අපේ රටේ ජනතාව සියයට 55 ක් ඇවිත් තිබුණා ඡන්ද පාවිච්චි කරන්න. පාර්ලිමේන්තුවරණයේ දී එනම්, මහමැතිවරණයේ දී, අපේ ජනතාව 63% ක් පමණ ඡන්දය පාවිච්චි කරල තිබුණා.

ඒ අපේ ස්වාමිවරු අපිව පත් කළේ අපි ඉදිරිපත් කරපු මැතිවරණ ප්‍රකාශනයක් අනුවයි. ඒ මැතිවරණ ප්‍රකාශනය මා ළඟ තිබෙනවා. එය මම නිතරම ළඟ තියාගෙන ඉන්නවා. භාෂා තුනෙන්ම අපි මේ මැතිවරණ ප්‍රකාශනය ජනතාව ඉදිරියේ තැබුවා. මේ මැතිවරණ ප්‍රකාශනය අනුව තමයි පොදු ජනතාව අපව පත් කළේ. අපේ යුතුකමක් තිබෙනවා එහෙම නම්, මේ මැතිවරණ ප්‍රකාශනය ක්‍රියාත්මක කරන්න. මේ මැතිවරණ ප්‍රකාශනය අපි සකස් කළේ 1988 අගෝස්තු මාසෙ සිටයි. එය සකස් කිරීමට අපි ගත්තේ එක්සත් ජාතික පක්ෂයේ නොයෙක් සංවිධානවල අදහස් උදහස් පමණක් නොවෙයි; ඉන් බාහිර සංවිධානවල අදහස් උදහස් ද අපි ලබාගත්තා. රටේ නොයෙ ජනතාවගේ අදහස් උදහස් ද අපි ලබාගත්තා. 1977 ඉඳල අපේ පාලනය ක්‍රියාත්මක වන ආකාරය සහ එහි ප්‍රබල තැන් හා දුර්වල තැන් ගැන අපි ජනතාව ඉදිරියේ තැබුවා. මේ මැතිවරණ ප්‍රකාශනය සකස් කළේ ඉදිරියට අප විසින් ක්‍රියාත්මක කළ යුතු කරුණු ගැන අදහස් උදහස් විමසීමෙනුයි. අපේ දැනුම සහ අපේ අත්දැකීම් අනුවයි මේ මැතිවරණ ප්‍රකාශනය අපි සකස් කළේ. අපි දැඩිලෙස එල්බ ගත්ත න්‍යායධර්මයක් හැටියට යමක් තිබුණේ නම් ඒ ස්වල්පයක් පමණයි.

අපි යථා තත්ත්වය තේරුම් ගෙන වෙනස්කිරීම් ඇතිකිරීමට සුදුසු කණ්ඩායමක් හැටියටයි ජනතාවගෙන් මේ වරම ගත්තෙ. අපි දැඩිව පිළිඅරගෙන තිබුණ පදනම තමී ශ්‍රී ලංකාවේ ස්ෛවරීත්වයයි; ඒ ස්වාධීනත්වය නැති කරන්න අපි ඉඩ දෙන්නේ නෑ. ශ්‍රී ලංකාවේ භෞමික අඛණ්ඩතාව, ශ්‍රී ලංකාවේ ඒකීය භාවය, ඒ වගේම ශ්‍රී ලංකාවාසී ජනතාවගේ මානව උරුමය හා අයිතිවාසිකම් නැති කිරීමට අපි ඉඩ දෙන්නේ නැහැ. 1978 අපේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවෙන් තමුන්නාන්සේලා දන්නා පරිදි මානව හිමිකම්, මිනිස් අයිතිවාසිකම්, ප්‍රතිපත්ති හැටියට පිළිඅරගෙන තිබෙනවා පමණක් නොව, ඒවා උල්ලංඝනය කළොත් උසාවිය මාර්ගයෙන්,. අධිකරණය මාර්ගයෙන් එයට පිළිසරණ ලබාගන්න පුළුවන් තත්ත්වයට අපේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව අපි සකස් කරල තිබෙනවා. ඒ තමයි අපි දැඩිව පිළිගත්ත පදනම. ජනතාවගේ දේශපාලන, ආර්ථික, සාමාජික, හා සංස්කෘතික වැඩිදියුණුව පිණිස, අපි විටින් විට, යථාර්ථයෙන් ප්‍රායෝගික වැඩපිළිවෙලවල් ක්‍රියාත්මක කරන්න සූදානම් බවද අපි ජනතාවට කිව්වා.

මේ ලෝකය නිරතුරුව වෙනස් වෙනවා.මිනිසා වෙනස් වෙනවා.මේ වෙනස්වන ලෝකයේ අපි නොවෙනස්ව ඉන්නෙ නෑ. අපිත් යථාතත්ත්වය තේරුම් අරගෙන වෙනස් වෙන්න ඕන. අලුත් ප්‍රශ්නවලට අලුත් විසඳුම් සොයන්න ඕන. අලුත් ප්‍රශ්නවලට පරණ විසඳුම් හරියන්නේ නෑ. මේ යථාතත්ත්වය තේරුම් අරගෙන තමයි, මේ මැතිවරණ ප්‍රකාශනය අපි සකස් කළේ. අපේ රටේ ආර්ථික සමෘධිය ඇති කිරීමේ දි බාධක කරුණු ලෙස නාස්තිය සහ දූෂණයත් පරිපාලන තන්ත්‍රයේ අක්‍රියභාවයත් අපට පෙනුණා. ලිපිගොනු තරවෙද්දී ප්‍රශ්න විසඳෙන්නේ නැහැ. ළිඳක් කැණීමට උවමනා කරන කරුණු ඇතුළත් ලිපිගොනුව අඩි තුන හතරකින් පළල් වෙද්දිත්, ගැඹුරු වෙද්දිත් ළිඳ වෙනුවෙන් එක උදළු පාරක්වත් වැදිල නෑ. ඒ විදියේ පරිපාලන ගැටළු, නාස්තිය, දූෂණය, අකාර්යක්ෂමතාව තිබෙන බව අපට පෙනී ගියා. ඒ නිසා තමයි අපි මෙවර පත්වුණු වෙලාවේ සිට අපේ ලේකම්වරුන්ට, දෙපාර්තමේන්තු ප්‍රධානීන්ට සහ අනිකුත් ආයතන ප්‍රධානීන්ට අපි කියන්නෙ පුළුවන් තරම් තමුන්නාන්සේලාගේ අත්දැකීම් පාවිච්චි කරල මේ විදියේ නාස්තිය දූෂණය නැති කරන්න, කඩිනමින් සේවාවන් ඉටු කරන්න සූදානම් වෙන්න ඕනෑ කියා.

අපේ අහිංසක ජනතාව ගෙන් වැඩි දෙනෙක් ජීවත් වන්නේ නගරවල තිබෙන මුඩුක්කුවල යි, ඒ වගේම ගම්බද පැල්පත්වලයි. ශ්‍රී ලංකාවේ ජනගහණයෙන් සියයට 85 ක් ජීවත් වෙන්නේ ගම්බදව. අපි ඒ ජනතාව නගාසිටුවන්න ඕනෑ. ජනගහණයෙන් භාගයක් පමණ ජීවත් වන්නේ ආහාර මුද්දරවලින්. කොයිතරම් තාඩන, පීඩන, ගර්ජන තිබුණත්, මරණ තර්ජන තිබුණත් උදෙන්ම ඡන්ද පොළට ගිහිල්ල, පෝලිමේ ඉඳල ගුටිකකා ඡන්දෙ පාවිච්චි කළේ ඒ ජනතාව තමයි. ඒ

ජනතාවගේ අදහස් උදහස් අප තේරුම් ගන්න උත්සාහ කරන්නේ ඒ නිසයි. අපි ආණ්ඩු බලයට පත් උණාම මැති ඇමතිකම් ලබාගත්තම, දෙපාර්තමේන්තු ප්‍රධානකම් ලැබුණම, ඒ ජනතාව හමුවෙන්න තිබෙන අවකාශය සීමාසහිතයි. නමුත් හමුවන මේ සමාජයේ උඩුතලයේ කීපදෙනෙකුගේ අදහස් තමයි ජනමතය හැටියට අපි භාරගන්නේ.

ලක්ෂ ගාණක් මේ රටේ ජනතාව පත්තරයක් කියවන්නට අවකාශයක් නැතිව ඉන්නවා. ගුවන් විදුලියට ඇහුම්කම් දෙන්නට විවේකයක් නැතුව ඉන්නවා. රූපවාහිනිය බලන්න ආර්ථික තත්ත්වයක් නැතුව ඉන්නව. ඒ ජනතාවගේ අදහස් උදහස් අපි තේරුම් අරගන්න ඕනෑ. සමාජයේ උඩුතලයේ ජීවත්වන, හුඟක් වරප්‍රසාද ලබාගත්ත ස්වල්පදෙනාගේ අදහස් උදහස් ජනමතය කියල පිළිගන්න නරකයි. ඒ විදියට අපි අපේ ආකල්ප ටිකක් වෙනස් කර ගන්න ඕන. දුප්පත් ජනතාව, දෙපාර්තමේන්තුවකට, අමාත්‍යංශයකට යමක් කරවා ගන්න එන්නේ බොහොම අමාරුවෙනුයි. ඒ අයට පහසුවෙන් ඇවිත් තමන්ගේ ඕනෑ එපාකම් ඉෂ්ට කරගන්නට අවකාශයක් අපි සලසන්න ඕන. ඒ අයට පසු කළයුතු හුඟක් වටවංගු තිබෙනවා. හුඟක් වේලා බලාගෙන ඉන්න ඕන. හුඟක් පෝර්ම කොළ පුරවන්නට සිදු වී තිබෙනවා. මේ ගැන සමීක්ෂණයක් පවත්වන ලෙස අපි අපේ ලේකම්වරුන්ට කියා තිබෙනවා. අපි මේ ලිපිගොනු තර කර කර ඉන්නවා. එන්න එන්නම පෝර්ම කොළ වැඩි කර කර ඉන්නවා. යම්කිසි ව්‍යාපෘතියකට වෙන්කරන මුදල්වලින් කොච්චර පෝර්ම කොළවලට යනවද? කොච්චර මේ ලිපිගොනු නඩත්තු කරන්න යනවද, පරිපාලන ක්ෂේත්‍රයේ තිබෙන මේ වටවංගු නිසා පාරක් හදන්න රුපියල් ලක්ෂයක් වෙන් කළොත්, ඒ ලක්ෂයෙන් කීය ද පාරට යන්නෙ? සියයට 60 ක්ම මග දිගටම තිබෙන දූෂණයට, නාස්තියට යනව නේද කියල කල්පනා කරල අඩු ගානෙ සියයට 75 ක් වත් අරමුදලෙන් අර ව්‍යාපෘතියට යන විදියට මේ වැඩපිළිවෙල සකස් කරන්න කියලයි අපි කියල තියෙන්නෙ.

අපි නමුත්තාසේලා නඩත්තු වෙන්නෙ මේ රටේ ස්වාමිවරුන් වන පොදු ජනතාව - ඔවුන්ගේ දහඩියෙන්, ඔවුන්ගේ ලෙයින් හා ඔවුන්ගේ කැපවීමෙන් අපට හොයා දෙන අරමුදල්වලින් බව මොහොතක්ටවත් අමතක කරන්න එපා. පඩිනඩි ලබනව නම් පාරිතෝෂික ලබනව නම්, ඒව ඔක්කොම අපට ලැබෙන්නෙ අර අතිවිශාල අහිංසක දුප්පත් ජනතාවගෙන්. ඒ ජනතාවගෙන් විශාල පිරිසක් ආහාර මුද්දරවලින් ජීවත්වෙමින් අපේ නිලධාරීන්ට හොඳට කන්න බොන්න සළස්වල තිබෙනවා. ඒ අය ගැන හොඳින් සොයා බැලීම අපේ යුතුකමයි. ඒ අයට ලේසියෙන් තමන්ගේ කාර්යයන් ඉෂ්ට කරගන්න වැඩපිළිවෙලවල් යෙදීම අපේ යුතුකම යි.

ඊළඟ කාරණය අපි හොයා බලමු. ඒ මෙරට නිෂ්පාදන වැඩිදියුණු කිරීමයි. අපේ රටේ හොඳ පසක් තිබෙනවා. හොඳ දේශගුණයක් තිබෙනව. හොඳට වැස්ස ලැබෙනවා. දක්ෂ ජනතාවක් ඉන්නවා. ඒ ජනතාව ලවා මේ රටේ නිෂ්පාදන ක්ෂේත්‍රය පෝෂණය කරන්න ඕනැ. කෘෂිකාර්මික නිෂ්පාදන, කාර්මික නිෂ්පාදන. ජනතාවගේ ශ්‍රම ශක්තිය යොදවා ඔවුන්ගේ සහභාගීත්වයෙන් වැඩිදියුණු කරන්න ඕනැ. ඒ නිෂ්පාදනය වැඩි වුණොත් ඉහළ මට්ටමේ නිලධාරීන් වුවත්, අනිකුත් ක්ෂේත්‍රවල නිලධාරීන් වුවත් ඔවුන් ලබන පඩිනඩි තමන්ගෙ ජීවන වියදම පිරිමසා ගන්න මදිවෙනවා. ජීවන වියදම අඩු කිරීමට උද්ධමනය අඩු කිරීමට හා මුදලේ වටිනාකමට නියම විදියට තමන්ට අවශ්‍ය පාරිභෝගික ද්‍රව්‍ය ලබාගන්න නම්, නිෂ්පාදනය වැඩි කරන්න ඕන. දේශීය නිෂ්පාදනය වැඩි කරන්න ඕන.

අපි කන බොන ආහාර ද්‍රව්‍ය, රෙදිපිළි වෙනත් බඩු භාණ්ඩ සියයට 95 ක් ම අපට, මේ රටේ නිෂ්පාදනය කරන්න පුළුවන්. ඊට උචිතමනා කරන වාතාවරණය 1977 ඉඳල අපේ රජය ඇති කරල තියෙනව. මූලික අවශ්‍යතාවයන්, වාරිමාර්ග අතින් වේවා, විදුලිබලය අතින් වේවා, මංමාවත් අතින් වේවා, දේශීය හා විදේශීය වෙළඳපොළ අතින් වේවා, විශාල වැඩ කොටස් 1977 ඉඳල කර තිබෙනව. කාර්මික වශයෙන් විශාල පරිවර්තනයක් ඇති කළා. දැන් ඕන කරන්නෙ මේ කාල පරිච්ඡේදයේදී අපේ රටේ ජනතාව සම්බන්ධ කරගෙන වේගවත් නිෂ්පාදනයක්, විශේෂයෙන් අපේ රටේ නිෂ්පාදනය කළහැකි ආහාර ද්‍රව්‍ය, රෙදිපිළි, වෙනත් බඩු භාණ්ඩ නිෂ්පාදනය වේගවත් කිරීමයි. අන්න ඒ සඳහා තමයි විශේෂයෙන් අපි ජනසවිය සැලසුම් කළේ. ජනසවිය ක්‍රියාත්මක කළේ නිකම් පිංපඩියක් දීමට නොවෙයි. අද අපි අමතක කර තිබෙන ශ්‍රම ශක්තියක් තියෙනව. සියයට 50 කටත් වැඩිය ජනතාව ආහාර මුද්දරවලින් ජීවත්වෙනවයි කියල කියන්නෙ, අපේ වටිනා සම්පත වන මිනිස් සම්පත අපි නිසි කාර්යයකට යොදා ගන්නේ නැතුව නිකම්ම ඉන්නවයි කියන එකයි. ජනසවිය සකස් කළේ ඒ ඌනතාවය පිරිමසන්නයි. නිෂ්පාදනයට ජනතාව සම්බන්ධ කරගන්නයි.

මුලින් ම ජනතාවට ශාරීරික පෝෂණය දිය යුතු යි. ඒ පෝෂණයවන ජනතාව ලවා ම නිෂ්පාදනය පෝෂණය කළ යුතුයි. ඒ මාර්ගයෙන් පමණයි, රටේ ආර්ථිකය වැඩිදියුණු කරන්නටත් පඩි නඩි ලබන, ආදායම් ලබන උදවියගෙ ආදායම් මට්ටම වැඩි කරමින් නියම ජීවන තත්ත්වයක් ඇති කරගන්නටත් පුළුවන් වෙන්නෙ. නිෂ්පාදනයකින් තොරව කොයිතරම් පඩි වැඩිකළත් ඒකෙන් උද්ධමනය වැඩිවනවා මිසක් කවදාවත් ජීවන වියදමට ප්‍රතිකාරයක් ලබාගන්න බැරි බව තමුන්නාන්සේලා පිළිගන්නවා ඇත. මේ අපේ රජය පිළිගත් ඉතා වැදගත් සිද්ධාන්තයක්. නිෂ්පාදනය වේගවත් කිරීමේ වැඩපිළිවෙළේ

කල්පනා කරල බලන්න. තුවක්කුවට බියෙන් වැඩ කිරීම නවත්වනව නම්, ඒ තුවක්කුව ජයගත්තදාට තමුන්නාන්සේලාගෙන් වැඩ ගන්නෙ තුවක්කුවමයි. එතකොට වෘත්තීය සමිති අයිතීන්, සාධාරණ ඉල්ලීම්, පරිපාලන රෙගුලාසි, මුදල් රෙගුලාසි ඒ කිසිත් ඉදිරිපත් වන්නෙ නැහැ. මෙන්න තුවක්කුව. පැය 8 නොවෙයි පැය 24 ක් වැඩ කරපන් කියා කියාවි. එදාට පෙළපාලි යන්න හම්බවෙන්නෙ නෑ. එදාට ඉල්ලීම් ඉදිරිපත් කරන්න හම්බවෙන්නෙ නෑ. ඒ නිසා එවැනි දෙයින් පසුබානව නම්, එහෙනම් අපි පත්වෙලා තිබෙන මේ තානාන්තරවලට අපි සුදුස්සෝ නොවෙයි.

පරිපාලන ක්ෂේත්‍රයේ විශාල පිරිසක් අපි දිහා බලා ඉන්නවා. අපි අනුගමනය කරන්න ඉන්නව. මගේ ප්‍රධානියා යන්නේ නැහැ. මොනවට ද මම යන්නෙ? හැම එක්කෙනාට ම ප්‍රධානියකු ඉන්නවා. හැම එක්කෙනාම මේ මූලිකයා දිහා බලනවා. ඒ ආදර්ශය අපි දෙන්න ඕන. සාමාන්‍ය කාලයක උණත් මුලින්ම කාර්යාලයට යන්නේ කවුද? ඉස්සෙල්ලම වැඩපළට යන්නෙ, කාර්යාලයෙට යන්නේ කවුද? ඒ කාර්යාලෙ ඉන්න ඉතාමත්ම සුළු සේවකයා යි. කාර්යාලෙ වහල යතුරු ගිහිල්ල පොලීසියට දීමට භාරදීල තිබෙන්නේ ඔහුට. ඒක වැරදියි. ඒක වෙනස් කරන්ට ඕනෑ. නායකයා මුලින්ම යන්න ඕනෑ. නායකත්වය දෙන්ට ඕනෑ. ලොක්කා කියන්නෙ ඒ වගේ එක්කෙනෙකුටයි. මුලින් වැඩපළට යන්න ඕනැත් කාර්යාලෙට යන්න ඕනැත් තමුන්නාන්සේලයි. තමුන්නාන්සේලට වාහන තියෙනව. කාර් තියෙනව, වෙනත් පහසුකම් තියෙනව. තමුන්නාන්සේලා කාර්යාලයට යන්නෙ නැත්නම්, පයින්, එහෙම නැත්නම් බස් එකෙන් සැතපුම් ගණන් යන සේවකයා වැඩට යන්නේ කොහොමද? කාර්යාලයක කාර් තිබෙන නිලධාරී කීපගොල්ලක් ඉන්නව නම් ගමනා ගමනයේ අපහසුවක් ඇතිවෙනවයි කියා දන්නවනම්, ඒ කාර්යාලෙ ප්‍රධානියාගේ යුතුකමක් තිබෙනවා ඒ කාර් තියෙන කට්ටියත් එක්ක කථා කරගෙන පුළුවන් තරමක් අර වාහන නැති සේවකයින්වත් ඒ වාහනවලින් ගේන්ට. රටේ සමෘද්ධියක් ඇතිවීමට නම් අන්න ඒ විධියේ කාර්යක්ෂමතාවක් අවශ්‍ය යි.

ඒව නොකෙරුවොත් තමයි ආර්ථික අර්බුදයක් ඇති වෙන්නේ. මේවට අපට උපදෙස් දෙන්ට ජාත්‍යන්තර ආයතනවලින් එන්ට ඕනෙ නැහැ. තමුන්නාන්සේලා තරම් දක්ෂ අය වෙන කවුරුත් නැහැ. ලෝකේ වැටුණු රටවල් නැගිටුණු හැටි තමුන්නාන්සේල දන්නව. තමුන්නාන්සේලා පිටරට වලට යන්නෙ ඇයි? මම ගිය අවුරුදු 11 දීම දෙපාර්තමේන්තු ප්‍රධානීන් පිටරට යන ඒව අනුමත කරල තියෙනව. මම දන්නව කොපමණ දෙනෙක් පිටරට ගිහිල්ල තියෙනව ද කියා. අගමැතිතුමාට කිව්ව ඒ ක්‍රමය වෙනස් කරන්න. මීට පස්සෙ දෙපාර්තමේන්තුවකින් එක්කෙනෙක් අවුරුද්දකට වැඩිය ගිහිල්ල

තියෙනව නම් මගෙන් අසා අවසර දෙන්න කියා මා කියා තිබෙනව. ඒ අය පිටරට ගොස් ඇවිත් මේ රටේ ක්‍රියාත්මක කළේ මොනවද කියා මා සොයා බලනව. ශිෂ්‍යත්වවලට යනවා කියා යනවා. අර සම්මේලනයට කියල යනව. අර සාකච්ඡාවට කියල යනව. අවුරුද්දකට හත් අට පාර යනව. එසේ ගියත් කවුරුහරි ටෙලිපෝන් කෙරුවොත් ගෙදරට, වැඩට එන්නේ නැහැ. නමුත් ඔක්කොම පරප්‍රසාද බුක්ති විදිනව. කොයිතරම් තර්ජන තිබුණත් වැඩට ආ අය මොකක්ද මට කියන්නෙ? "ඒක හරි වැඩක්නේ සර්, වැඩියෙන් පඩි ගන්නෙත්, වැඩියෙන් වරප්‍රසාද ගන්නෙත්, වැඩියෙන් පිටරටවල්වලට යන්නෙත් වෙන කවුරුවත්, වැඩියෙන් නැහෙන්නෙත් අපි. අර්බුදයක දී අපට නායකත්වය දෙන්න කෙනෙක් නෑ" කියා ඒ අය මට කියනව. තමුන්නාන්සේලාට අමාරුකම් තිබෙන බව මා දන්නව. ඇතැම් වෙලාවල දරු පවුල් බියෙන් වෙව්ලනව. තර්ජන ක්‍රියාත්මක වෙලත් තිබෙනව. ඉතින් එහෙනම් අපි දෙකෙන් එකක් තෝරා ගන්න ඕන. රාජකාරිය ;කරනවද? හය වෙලා ගෙදරට වෙලා ඉන්නවද? දෙකින් එකක් තෝරාගන්න ඕනෑ. එහෙම තෝරාගෙන ඇමතිතුමාට දැනුම් දෙන්න. දෙපාර්තමේන්තු ප්‍රධානියාට දැනුම් දෙන්න. ඇතිවෙන ඇබැර්තු පුරවන්නට මා දන්නවා. මේ කාර්ය භාර ගත්තෙ මේක දාල දුවන්න නොවෙයි. මා ඒ කාර්යය භාරගත්තේ මේ රට වැටී තිබෙන තත්ත්වයෙන් ගොඩ අරගන්න බව මම තමුන්නාන්සේලාට ප්‍රකාශ කරන්න කැමතියි. ඒකට අවශ්‍ය කරන හැම පියවරක්ම ගැනීමට මා බලාපොරොත්තු වෙනවා.

මගේ මැතිවරණ ප්‍රකාශනය අරන් බලන්න. ප්‍රථමයෙන් සාමය, දෙවැනි කාරණය සංවරය. සාමය මගින් සංවරය ඇති කරල සමෘද්ධිය ඇති කරන්න. මා ඒ කරන්නේ කොහොමද? තුවක්කුවෙන් බයිනෙත්තුවෙන් නොවෙයි; සාකච්ඡාවෙන්. කාගේත් අදහස් උදහස් ලබා ගැනීමෙන් මම ඒක කරන බව තමුන්නාන්සේලාට තේරෙනව ඇති. සමහර උදවිය කියනව ඕව කර කර බෑ දැඩි ක්‍රියාමාර්ගයක් ගන්න කියනව. එහෙම කියන අය තමයි වැඩට එන්නෙ නැත්තෙ. සමහර උදවිය වැඩට නැවිල්ල ගෙදර ඉන්නව. බොරු ටෙලිපෝන් කෝල්ස් දානව, දෙපාර්තමේන්තුවෙ ඇතුළෙ ඉඳගෙනම, අර කොනේ ඉඳල මේ කොනට කියනව, "හෙට වැඩට එන්න එපා. ආවොත් මරනව" එසේ දුරකථන පණිවුඩ දුන් කීපදෙනෙක් අහුවෙලත් තියෙනව. දැන් මේක පැතිරෙනව. බොරු ලියුම් එවනව. එදාට කවුරුත් වැඩට එන්නෙ නෑ. මුලින්ම එන්නෙ නැත්තෙ ලොක්කා. ඊළඟට, ඊළඟ එක්කෙනා, ඊළඟ එක්කෙනා, මේවට ද මේ ඉහළ මට්ටම් පඩිනඩි ගෙවන්නේ? මෙසේ කිරීමට ද තමුන්නාන්සේලා උපාධි ලැබුවේ? මේවටද මේ පුහුණුවීම් ලබා ගත්තේ? දෙකෙන් එකක් තෝරගන්න. මහජන සේවයට ඉදිරිපත් වෙලා කැපවෙලා ජනතාවගෙන් තඩත්තු වෙනවද? එහෙම නැත්නම් බිය සන්ත්‍රාසයෙන් වෙව්ල වෙව්ලා ගෙදරට වී රැකියාවක් නැතුව ඉන්නවද කියල තමුන්නාන්සේලා තෝරගන්න ඕනෑ.

මම ජනාධිපතිවරණයට අපේ පක්ෂයෙන් ඉදිරිපත් වෙන්න භාරගත්තේ මේ අමාරු තත්ත්වය නො දැන නොවෙයි. දැනගෙන භාරගත්තෙ. එහෙනම් මගේ යුතුකමක් තිබෙනව. ඒ යුතුකම මොකක්ද? ජනතාව මා වෙත පවරපු වරම අනුව ඔවුන් මේ වැටිල ඉන්න තත්ත්වයෙන් ගොඩ ගැනීමයි. ඒකට හොඳ වැඩපිළිවෙළක් තිබෙනව. මට අවුරුදු දෙකක් තමුන්නාන්සේලාගේ සහාය ලැබුණොත් තමුන්නාන්සේලාට පෙනෙයි මොන විදියේ වෙනසක් මේ ලංකාවේ ඇතිවෙනවද කියල. පුදුම විදියේ පරිවර්තනයක් ඇති කරන්න පුළුවන් වැඩපිළිවෙළක් අපට බොහොම ලේසියි විවේචනය කර කර ඉන්න. බොහොම ලේසියි වරද අනුන් පිට පටවන්න. අපි අපෙන් වෙන වරද ගැන කල්පනා කරන්නෙ නෑ. අපි දක්වන නොසැලකිල්ල අපි තේරුම් අරගෙන ඒක නැති කරන්න උත්සාහ කරන්නෙ නෑ. අනික් එක්කෙනා පිට වරද පටව පටව ඉන්න තමයි කල්පනාව. අපි වෙන අය කරන වරදට නිදහසට කරුණු අහනව; අපි වැරදි කරන බව යටපත් කරගෙන.

ඊයේ පෙරේදා මාව හම්බවෙන්න ආව පිරිසක්. බොහොම වැදගත් කාරණයක් කීවා. බොහොම තර්ජන හා අමාරුකම් තිබෙන බව ඒ අය කීවා. එහෙත් තමන්ගේම අංශයේ කෙනෙක් මෙන්න මෙහෙම දෙයක් කළාය කියල, ඒ අය මට කීවා. මං ඇහුව මොකක්ද කියල. එයා ළඟට වැඩ කරන්න ඉන්න එක්කෙනා ඇවිල්ල පොත අත්සන් කරල කිව්වලු ''තර්ජනයක් තියෙනව මට. පොත අත්සන් කෙරුවට මට වැඩ කරන්න බෑ''. එතකොට මේ ප්‍රධානියා කිව්වලු ''වැඩ කරන්න බැරිනම් පොත අත්සන් කරපු එක වරදක් කියා'' වැඩ නොකළොත් අත්සන් කළාට වැඩ කළේ නැහැ කියා ලියනවා'' කියලා කීවාලු. ''ආ එහෙනම් මම වැඩ කරන්නම් '' කියල වැඩ කළාලු. එයා දිහා බලා සිටි අනිත් එක්කෙනා වැඩ කරාලු. අනිත් එක්කෙනාත් වැඩ කරාලු. සියයට 75 ක් එදා වැඩ කරාලු. බලන්න නායකත්වය. මට ආරංචි උනා අපේ අධිකරණයේ විනිශ්චයකාර තුමියක් උසස් ආදර්ශයක් දීල තියෙනව. එතුමිය ගියාම රජකාරියට එතනදිත් ඔවගේ වැඩක් වෙලා. නිලධාරියෙක් අත්සන් කරල වැඩ කරන්න බෑ කීවලු. එහෙනම් මට කරන්න දෙයක් නෑ. වැඩ කරන්න ඕන. පටන් ගන්න වැඩ කරන්න. තමා තඩු කල්දාන්නෙ නෑ කියා ඒ විනිශ්චයකාරතුමිය කියා තිබෙනවා. මා මෙතනදි මැරුණත් පාරෙදි මැරුණත් එකයි, ගෙදරදි මැරුණත් එකයි. මම රාජකාරිය ඉෂ්ට කරන්න ආවා. මම ඒක කරනවා කියා තිබෙනවා. ඒ උදාර ආදර්ශයක්. මෙහෙම සිය දහස් ගණනක් අපට ආරංචි වෙනවා.

ඒ නිසා දෙන්න නායකත්වයක්. තමුන්නාන්සේලා අද ලේකම්වරු හැටියට ඉන්නව. දෙපාර්තමේන්තු ප්‍රධානීන් හැටියට ඉන්නව, සභාපතිවරුන් හැටියට ඉන්නව. එහෙම නම් දෙන්න නායකත්වයක්.

මෙවැනි අවස්ථාවක ඒ නායකත්වය නොලැබෙනවා නම් කවදාට ද ඒ නායකත්වය දෙන්නෙ. එහෙම දෙන්න බැරිනම් දෙවියන්ගේ නාමයෙන් ඒ වැඩේ වෙන කෙනෙකුට භාරදීල යන්න. ඒකෙ කිසි වරදක් නෑ. ඒක සාධාරණයි. තමුන්නාන්සේට බැරිනම්, ඊළඟට ඉන්න එක්කෙනා පත් කරනවා. එයා නැත්නම් ඊළඟට ඉන්න එක්කෙනා පත් කරනවා. මේක කරගෙන යන්න ඕන. එහෙම නැත්තම් ඇවිල්ල තමන්ගේ රාජකාරිය හරියට ඉෂ්ට කරන්න. මේ මම කියන දෙයක් නොවෙයි. මේ රටේ ජනතාව, අපේ හාමිපුත්තු, අපේ ස්වාමිවරු මට කියන්නය කියල අණ කරල තියෙන දෙයක්. මම ඔවුන්ගේ අතේ තිබෙන මෙවලමක් පමණයි. මට පැවරිලා තිබෙනව ඒ රාජකාරිය කරන්න. මම ඒක භාර ගන්නව, ඒ ජනතාවගේ සිතැඟි තමුන්නාන්සේලාට කියන්නටත් ඉටු කරන්නටත්.

අපි කරන හැම ක්‍රියාවකම ප්‍රතික්‍රියාවක් තිබෙන බව අප මතක තබා ගන්න ඕනෑ. එකවරක් මට මතකයි, වැඩ වර්ජනයක් ඇති උණා. ඒ වැඩ වර්ජනයට සම්බන්ධ වූ කණ්ඩායමක් මට ලියමනක් එව්ව. මේ ලියමන එව්වේ තැපැලෙන්. සුමාන දෙකකට විතර පස්සෙ මට ටැලිපෝන් කරල කිව්ව, "මම ලිපියක් එවූ නමුත් අපට ඒකට උත්තරයක් නෑ" කියල. මම ඇහුව "කවදද?" දැන් සුමාන දෙකකට විතර ඉස්සෙල්ල කියා කීවා. මම කිව්ව එහෙම වෙන්න බෑ, මට ලැබෙන ලියුම්වලට එය ලැබුණු බව මා දන්වනවා. පුළුවන්නම් පුළුවන්, බැරිනම් බෑ කියනවා, කියා මා කීවා., ඒ ලිපිය එවා සුමාන දෙකක් ගත වූ බව ඔහු කීවා. එහෙමනම් තැපැලේදී එයට කුමක් හරි සිදු වන්නට ඇතැයි මා කීවා. අන්න එතකොට තමයි ඔහුට මතක් වුණේ ඒ අයගේ වැඩවර්ජනයටත් තැපැල් කන්තෝරු සම්බන්ධ කරගත්ත බව. තමුන්නාන්සේලාගේ වැඩ වර්ජනයට සහාය වශයෙන් තැපැල් දෙපාර්තමේන්තුව සම්බන්ධ කරගත්ත නේද කියා මා ඇහුවා. තමුන්නාන්සේලාගේ ලිපිය තවම මේල් රූම් එකේ ඇති. අන්න තමුන්නාන්සේලාගේ ක්‍රියාව නිසාම ප්‍රතික්‍රියාව. ප්‍රතිඵලය මොකක්ද? ඒ ප්‍රතිඵලයට වගකිව යුත්තෙක් තමුන්නාන්සේ කියා මා කීවා.

අපි මේව කියල දෙන්න ඕන අපිත් එක්ක වැඩ කරන උදවියට. ඊනියා මම කියන්න කැමතියි අපි හරි දේ කරන්න බය වෙන්න නරකයි. අපි කවුරුත් කැපවෙලා ඉන්නේ සාධාරණයක් ඉෂ්ට කරන්න. ඊ. ළඟට අපි බයවෙලා විසඳුම් හොයන්නත් නරකයි. නමුත් විසඳුම් සොයන්න බය වෙන්නත් නරකයි. බිය සැක කියන දෙක තමයි අපි බෝකර ගත්තොත් නරකම ලෙඩ දෙක. කරන්න දෙයක් නෑ. අපි මේ වගකීම භාරගත්ත අනවරවලට මුහුණපානවා. ඒ හිරිහැර කරදර ඇති වෙනව.

අපි සියලුදෙනා දැන් මෙතන රුස්වී සිටිනවා. මේ ගොඩනැගිලි කඩා වැටුණොත්, එසේ නැත්නම් මෙතනට ග්‍රෙනේඩ් එකක් ගැහුවොත්. අපි පාර්ලිමේන්තුවෙ ඉන්නකොට අපට ග්‍රෙනේඩ් වලින් ගැහුවා. අපේ මැති ඇමතිවරු තුවාල ලැබුවා. කීප දෙනෙක් මරණයට පත් උණා. ඒ නිසා අපි වැඩ අත්හැරියද? එහෙම කරන්න බැ. අපට වගකීමක් තිබෙනවා. අපේ රටේ ජනතාවට. අපේ ජනතාව තමයි අපිව තඩත්තු කරන්නෙ. ඒ නිසා මං තමුන්නාන්සේලාට කියන්න කැමතියි. අපි සියලු දෙනා අධිෂ්ඨානයෙන් වැඩ කරන්න ඕන.

මේ රජයට වරමක් ලැබිල තිබෙනව මේ මැතිවරණ ප්‍රකාශනය ක්‍රියාත්මක කරන්න. මේ මැතිවරණ ප්‍රකාශනයේ වැදගත්ම අංගය තමයි දූෂී දූප්පත්කම සම්පූර්ණයෙන්ම අඩු කරන්න. එසේත් නැත්නම් නැති කරන්න තිබෙන විධිවිධාන ඇතිකරන්න. එසේ කිරීමට ඇති එකම එක මාර්ගයත් මේ මැතිවරණ ප්‍රකාශනයේ සඳහන් කර ඇති පරිදි නිෂ්පාදනය වැඩිකිරීම මගින්ම යි. ඒ නිෂ්පාදනයට ජනතාව හවුල් කර ගන්න ඕනැ. එයට ඕන කරන මූලික අවශ්‍යතාවයන් ගිය 11 අවුරුද්දේ දී අපේම ඒ රජය පිළියෙළ කරල දීල තියෙනව. ඒ දූෂී දූප්පත්කම නැති කරන්න නම් නාස්තිය සහ දූෂණය අකාර්යක්ෂමතාවය අපි පිටු දකින්න ඕන. ඒක කරන්න අපි ආදර්ශයක් දෙන්න ඕන.

අර්බුදකාරී තත්ත්වයක් ඇතිවෙලා තිබෙනව නම් ඒකට හේතු හොයන්න ඕන. ඒක අපේ වගකීම. ඒක රජයේ වගකීම. 'අපි ඒක කරනව. අපි උත්සාහ කරනව.' අද යම් අර්බුදකාරී තත්ත්වයක් තිබෙනව නම් ඒකට හේතුකාරක වූ දේ ඉවත් කරන්න අපි ක්‍රියා කරනව. මම විවෘත මනසකින් නැතිනම් නොබැඳි පිළිවෙතකින් වැඩ කරන්නයි කියල කියන්නෙ ඒකයි. මේ අර්බුදකාරී තත්ත්වයෙන් පීඩාවට පත් වෙන්නේ රජයේ මැති ඇමතිවරු පමණක් නොවෙයි. සියළු දෙනාමයි. සියළුදෙනාටම මම එකතුවෙන්නයි කියල කියන්නෙ ඒ නිසයි. අප අතර විවිධ මත තිබෙනවා. එකම දරු පවුලෙ අය අතර, එකම කාරණය ගැන විවිධ මත තිබෙන්න පුළුවන්. නමුත් අපි සියළුදෙනාටම එකඟ වන දෙයක් තිබෙනව. අපට පුළුවන් අපි එකඟවන මේ කාරණාව වෙනුවෙන් අපේ ශක්තිය පාවිච්චි කරල එකට වැඩ කරන්න.

තමුන්නාන්සේලාට පේනව ඇති මේ මැතිවරණ ප්‍රකාශනයෙන් කියපු දේ හුඟක් අද ඉෂ්ට කරන්න පටන්ගෙන තිබෙන බව. මම අවුරුදු පහක් තිස්සේ තිබුණු හදිසි නීතිය ඉවත් කළා. හිර භාරයේ හිටපු 1800 ක් දෙනා නිදහස් කළා. ඇයි? සාකච්ඡාවෙන්, සම්මන්ත්‍රණයෙන් අපේ ප්‍රශ්න විසඳගන්න. අවස්ථාවක් ලබාදෙන්නයි; නමුත් තත්ත්වය උග්‍ර වුණා. ඒ නිසා හදිසි නීතිය ආයෙත්ම පැණවීමට සිදුවුණා. ඒත් මේවාට හේතුකාරක වෙච්ච දේවල් සොයාගෙන ප්‍රශ්න විසඳන්ට සාමයෙන් විසඳන්ට ප්‍රයත්නය අපි අත්හැරලා නැ. අද අපේ හමුදාවල්, අපේ

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

පොලිසිය පුදුම කැපවීමකින් ක්‍රියාකරනවා. හමුදාවත්. පොලිසියත් ඉන්නෙ රටේ ජනතාව ආරක්ෂා කරන්න. අද සටන්කාමීන් අතේ අවි ආයුධ තිබෙනවා. අද සියලුම දේශපාලන පක්ෂවල නියෝජිතයින් අතේ අවිආයුධ තිබෙනව. අද හමුදාව සහ පොලිසිය අතෙත් අවි ආයුධ තිබෙනව. දුප්පත් අසරණ ජනතාව අතේ පමණයි තමන්ගේ ආරක්ෂාවට ඒ සඳහා කිසිවක් නැත්තෙ. ඒ ජනතාව ආරක්ෂා කරන්න අපේ ත්‍රිවිධ හමුදාවත්, පොලිසියත් ඉන්නවා, හදිසි නීතිය ක්‍රියාත්මක වෙන කොට සාමාන්‍ය නීතිය පැත්තකට යනවා. අඩුපාඩුකම් ඇති වෙන්න පුළුවන්. දුර්වලකම් ඇති වෙන්න පුළුවන්. ඒකට කරන්න දෙයක් නෑ. එහෙනම් තියෙන්නේ හදිසි තත්ත්වය ඇති කරන එකයි. එතකොට හමුදාවල් බැරුක්කවලට යයි. පොලිසිය සාමාන්‍ය සේවයට යයි. හමුදාවත් පොලිසියත් කරන්නේ ජනතාව රකින එකයි. ඒක අපි තේරුම් ගන්න ඕන. මම ඒකයි හදිසි නීතිය පණවනවට අකමැති. මෙවරත් එම නීතිය පැනෙව්වේ බොහොම අකමැත්තෙන්. ඒකයි මම පත්වුණු හැටියෙම හදිසි නීතිය ඉවත් කළේ. සමහර උදවිය ඉවත් කරන්න එපා කියද්දිත් මා එය ඉවත් කළා. මම නිතරම විශ්වාස කරන්නේ ජනතාවගේ හොඳ ගතිගුණ ගැනයි. හොඳ පැත්ත ගැන බලන්නටයි මම නිතරම උත්සාහ කරන්නෙ. මම ආවෙ එවැනි දර්ශනයක් ප්‍රතිපත්තියක් ක්‍රියාත්මක කරන්නයි. මගේ හයඅවුරුදු කාලයේ දී මේ රටේ අඩුගානේ රැකියා අවස්ථා දසලක්ෂයක් ඇති කරනව කියල මා කිව්වා. ඒ කියන්නෙ අතියම් රැකියා නොවෙයි. කෙළින්ම රැකියාවල්. මේ හය අවුරුද්ද තුළ මේ වැඩ සටහන අනුව ඇති කරන්න පුළුවන්. මට රට අවකාශ දෙන්න කියලයි මම කිව්වෙ. දැනටම ඒ අවස්ථාවල් උදාවේගෙන එනව. අද ගුරුවරු 25,000 ක් පත් කරන්න විධිවිධාන යොදල පොලිසියට සැහෙන පිරියක් බඳවා ගැනීමට විධිවිධාන යොදල තියෙනව නොයෙක් ක්ෂේත්‍රවල අවශ්‍ය රැකියා අද ඇති කරගෙන යනව. තමුන්නාන්සේලාට පෙනෙනව අපි කියපු දේ ඉෂ්ට කරන්න අපි ගන්න උත්සාහය. ඒ වගේම මගේ ප්‍රතිපත්තිය දේශපාලන පක්ෂ භේද අනුව වැඩකිරීම නොවෙයි.

මගේ පක්ෂයේ අයට විතරක් රැකියාවල් වරප්‍රසාද දෙනවා කියා මගේ මැතිවරණ ප්‍රකාශනයේ කියා නැහැ. සුදුසුකම අනුව අවශ්‍යතාව අනුව රැකියාවල් දීමට මා නියම කර තිබෙනවා. දේශපාලන වශයෙන් මොන මතයක් තිබුණත් ඒක සුදුසුකමක් නොවෙයි. සුදුසුකම් තිබෙනව නම් ඒ උදවියට ඒ අයිතිය ලැබෙන්ට ඕන. රැකියාවක් වේවා, වෙනත් රජයේ වැඩපිළිවෙළක් පිළිබඳව වේවා ඉඩම්දීම වේවා, කොයිදේ උණත් සුදුසුකමත්, අවශ්‍යතාවයත් අනුව එය දිය යුතුයි. භාෂා ප්‍රශ්නය අපේ රජය කාලයේ දීම විසඳල ඉවරයි. අද සිංහල දෙමළ රාජ්‍ය භාෂා. ඉංග්‍රීසි සම්බන්ධීකරණ භාෂාවක්. පුරවැසිභාවය පිළිබඳ තිබුණු ප්‍රශ්න

සියල්ලම විසඳා අවසානයි. ජනවාර්ගික වශයෙන් අපි පිළිගෙන තිබෙන ප්‍රතිපත්තිය තමයි ජන අනුපාතය අනුව රැකීරක්ෂාවල් දීම, ඉඩම් බෙදාදෙනව නම් ඒ ඉඩම් සංවර්ධනය කෙරෙන ප්‍රදේශයේ උදවියට ප්‍රමුඛත්වය දීම. හුඟක් ප්‍රශ්නවලට අපි පිළිතුරු සපයා තිබෙනව.

අපේ දරුවන්ගෙ මන්දපෝෂණය නැති කරන්න දිවා ආහාරය දියයුතු යැයි මා අදහස් කලා. අපි ඒ වැඩපිළිවෙළ පටන් ගත්ත. රුපියල් ලක්ෂ 20,000 ක් වෙන්කරලයි, ඒ පටන් ගත්තෙ. විශ්ව විද්‍යාල ආරම්භ කිරීමට තිබුණු අමාරුකම්, උසස් අධ්‍යාපන කටයුතු පිළිබඳ ඇමතිතුමා ඉදිරිපත් කලාම ඒ අවශ්‍ය දේ අපි දුන්නා. කරන්න පුළුවන් හැමදේම අපි කලා. මම හිතන්නෙ නෑ ලංකාවෙ ඇති වෙච්ච මොනම රජයක්වත් මේ වගේ ස්වල්ප කාලයකින් තමන්ගේ මැතිවරණ ප්‍රකාශනයෙන් ඉදිරිපත් කරපු වැඩ පිළිවෙළවල් ක්‍රියාත්මක කරන්න මේ තරම් කඩිනමින් ආරම්භ කළාය කියල. මේ අමාරුකම් මැද්දේ, දුෂ්කරතා මැද්දේ, නොයෙකුත් තර්ජන ගර්ජන තිබෙන අතර, අපි ඒවා අමතක කළේ නෑ. පැත්තකට දැම්මෙ නෑ. අපේ වැඩසටහන අපි ඉදිරියට කරගෙන යනව. එහි පසුබෑමක් ඇති කරන්න ඉඩදෙන්න එපා.

තමුන්නාන්සේලා තමයි මේ වැඩපිළිවෙළේ නායකත්වය දරන්නෙ. අද අපි අපේ ප්‍රශ්නවලට අපිම විසඳුම් සොයන්න ඕනෑ. නැත්නම් බාහිර බලවේග අපිව යටකර ගන්නව. මම ඒ නිසා තමයි උතුරේ එල්. ටී. ටී. ඊ. කණ්ඩායමටත් ජේ. වී. පී. කණ්ඩායමටත් නිරතුරුවම අප හා එකතුවෙන්න ආයාචනා කරන්නේ. අපේ මත භේද අපි රැකගනිමින් අපට විසඳගන්න පුළුවන් ප්‍රශ්න අපිම විසඳගමු. එහෙම නැත්නම් බාහිර බලවේගවලට යටත්වෙන්ට අපට සිද්ධ වෙයි. බලන්න කවුද හිතුවෙ, එල්. ටී. ටී. ඊ. කණ්ඩායම මේ රජයත් එක්ක සාකච්ඡා කරයි කියල. දැන් සාකච්ඡා කරනව විතරක් නොවෙයි අපි හුඟක් කරුණු ගැන එකඟත්වයට පත්වෙලා තිබෙනවා.

මගේ විශ්වාසය සාකච්ඡා මගින්, අදහස් උදහස් හුවමාරු කර ගැනීමෙන් අපට එකඟවෙන්න බැරි ඒවට වඩා එකඟ වියහැකි දේවල් ගැන එකඟත්වයක් ඇතිකර ගනිමින් අපි ස්වශක්තියෙන් නැඟී සිටින්න ඕන. නැත්නම් බාහිර බලවේගවලට අපි නැවතත් යටත් වෙන්න පුළුවන්. අපි පෘතුගීසිකාරයින්ට, ඕලන්දකාරයින්ට, යට උනේ ඉංග්‍රීසිකාරයින්ට යට උණේ අපිම ඔවුන්ට යටවෙච්ච නිසයි. අපේ වාද භේද අපි ඉස්මතු කරගෙන අපි සමගියෙන් සාමයෙන් අපේ ප්‍රශ්න විසඳගන්න ක්‍රියා නොකළ ඉතිහාසයක් අපට තිබෙනව. ඉතිහාසය අපි වෙනස් කරන්න ඕන. ඇයි අපට බැරි? යථාර්ථය බලල එකඟවෙන්න පුළුවන් ප්‍රමාණයට එකඟවෙලා අපේ මේ රටත් අපේ මේ ජනතාවත් ආරක්ෂා කරගනිමු.

අපේ දෙපාර්තමේන්තුවල පාලන කාර්යය නාස්තියෙන් දූෂණයෙන් තොර ව ජනතාවට පහසුවෙන් තමන්ගේ ප්‍රශ්නවලට පිළිතුරු ලබාගන්න පුළුවන් වන විදිහට සකස් කරන මෙන් ඉල්ලමින් මගේ කථාව මෙතනින් සමාප්ත කරනවා.

# அதிமேதகு சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் 1989 செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கூட்டுத்தாபன தலைவர்கள் ஆகியோருக்கு ஆற்றிய உரை

நம்நாட்டு மக்களால் இவ்வரசாங்கம் பெப்புரவரி மாதத்தில் தெரிவு செய்யப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் சனாதிபதித் தேர்தல் கடந்த ஆண்டில் திசெம்பர் மாதத்தில் தான் நடாத்தப்பட்டது. நான் சனவரி மாதம் 02 ஆந் திகதியன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டேன். பெப்புரவரி மாதம் நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் மார்ச்சு மாதத்தில் செயல்படத் தொடங்கியது. அதன் பின்னர் தான் வரவுசெலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. நமது அரசாங்கம் பதவியேற்று இப்பொழுது ஆறு மாதங்கள் கழிந்துள்ளன எனலாம்.

இக்காலப் பகுதியில் நான் பலமுறை அமைச்சுக்களின் செயலாளர்களையும், இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களையும் சந்தித்துப் பேசி உள்ளேன். அவர்களைத் தவிர பல்வேறு அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களையும் அவ்வமைச்சுகளின் கீழ் உள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அமைப்பாண்மைகள் ஆகியவற்றின் தலைவர்களையும் சந்தித்துள்ளேன். நமது நிருவாக இயந்திரத்தின் வலவர்களாகிய உங்களுக்கு, நமது அரசாங்கத்திடம் பொது மக்களால் வழங்கப்பட்டுள்ள ஆணையைப்பற்றி எடுத்துரைப்பதற்காகவே நாங்கள் இங்ஙனம் அடிக்கடி சந்தித்துப் பேசி வருகின்றோம். இன்று நாம் உங்களைச் சந்தித்துப் பேசுவதன் நோக்கம் அதுவே தான். நாடெங்கிலும் உள்ள உங்கள் கிளைத் திணைக்களங்களுக்கும், கிளை அமைப்பாண்மைகளுக்கும் உங்கள் வாயிலாக சில செய்திகளை அனுப்புவதற்கு எண்ணுகிறோம். நிருவாக இயந்திரத்தின் வலவர்களுக்கு அரசாங்கத்தின் குறிக்கோள்கள் பற்றியும் நோக்கங்கள் பற்றியும் தெளிவான அறிவு இருக்கும்போது தான் நாம் அறிமுகப்படுத்தும் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும்.

சனாதிபதி என்ற வகையில் நானும், பிரதம அமைச்சரும், ஏனைய அமைச்சர்களும் பொதுமக்களையே நமது எஜமானர்களாக கருதுகிறோம். சனநாயகஆட்சி ஒன்றின் அதிசிறப்பு வாய்ந்த அம்சம் அதுவேயாகும். சர்வாதிகார ஆட்சி ஒன்றின் தீய அறிகுறியாக ஆட்சியாளர்களே எஜமானர்களாக இருப்பதைக் காணலாம். அங்கு பொதுமக்கள் ஆளப்பட்டவர்களாகும். நமது எஜமானர்களாகப் பொதுமக்களைக் கொள்வது தான் சனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ள எங்களது மரபு.

அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ் நிருவாக முறையொன்றை உருவாக்குபவர்கள் பொதுமக்களாவர். பல இடர்களுக்கும், இன்னல்களுக்கும் மத்தியில் தான் சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்டது. ஆனால் பொதுமக்கள் அவ்விடர்களைப் பொறுத்துக் கொண்டே வாக்களித்தார்கள். தாக்குதல் பல வற்றுக்கிடையிலும் உயிருக்கே ஆபத்தான நிலையிலும் பொதுமக்கள் வாக்குச் சாவடிக்குச் சென்று சனாதிபதித் தேர்தலின்போது வாக்களித்தார்கள். அங்ஙனம் வாக்களித்தோரின் தொகை சுமார் 55% மாகும். அண்மையில் என்னைச் சந்தித்த அமெரிக்க காங்கிரஸ் சபையின் உறுப்பினர் ஒருவருக்கு இதுபற்றி நான் தெரிவித்தபோது அமெரிக்க நாட்டு சனாதிபதித் தேர்தல்களில் அந்நாட்டில் வாக்களித்தவர்களின் வீதம் அதனைவிட மிகக் குறைவானதென்று அவர் கூறினார். அண்ணளவாக 45% முதல் 48% வரை தான் அந்நாட்டில் வாக்கு விழுகின்றதென்று அவர் கூறினார். மிகப்பெரிய தடைகள் நிலவிய காலகட்டத்திலும் நம்நாட்டுப் பொது மக்களில் 55% மானோர் வாக்களித்திருந்தார்கள். பாராளுமன்றத் தேர்தலின் போது சுமார் 63% மானோர் வாக்களித்திருந்தார்கள்.

நமது எஜமானர்கள் நாங்கள் முன்வைத்திருந்த தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு அமைவாகவே எங்களைத் தெரிவு செய்தார்கள். அந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் என்னிடத்தில் இருக்கின்றது. அதனை நான் எப்பொழுதும் என்னோடு வைத்துக் கொள்ளுகின்றேன். இத் தேர்தல் விஞ்ஞாபனத்தை நாங்கள் 3 மொழிகளிலும் வெளியிட்டிருந்தோம். இத் தேர்தல் விஞ்ஞாபனத்தின் வண்ணம் தான் பொதுமக்கள் எங்களை தெரிவு செய்துள்ளார்கள். அங்ஙனமாயின் அத் தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவது எமது தலையாய கடமையாகும். 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இருந்து நாங்கள் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்து வந்தோம். அதனைத் தயாரிப்பதற்கு நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பல அமைப்புகளின் அபிப்பிராயங்களை மாத்திரம் கவனத்திற்கு எடுக்கவில்லை! அக் கட்சிக்கு வெளியேயுள்ள அமைப்புகளின், எண்ணக்

கருத்துக்களையும் பெற்றுக் கொண்டோம். நாட்டு மக்களது அபிப்பிராயங்களையும் பெற்றுக் கொண்டோம். 1977 ஆம் ஆண்டு முதல் நமது நிருவாக நடைமுறையின் சிறந்த அம்சங்கள் பற்றியும் சீரற்ற அம்சங்கள் பற்றியும் கருத்துத் தெரிவிக்குமாறு பொது மக்களிடம் கேட்டுக் கொண்டோம். அடுத்து வருகின்ற காலப்பகுதியில் நாம் நடைமுறைப்படுத்த வேண்டிய கொள்கைகளைப் பற்றி பொதுமக்களது அபிப்பிராயங்களை பெற்றுக் கொண்டு இத் தேர்தல் விஞ்ஞாபனத்தை வரைந்துள்ளோம். அத்துடன் நமது அறிவினையும் அநுபவத்தையும் கொண்டுதான் அத் தேர்தல் விஞ்ஞாபனத்தை வரைந்துள்ளோம். அத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நமது சித்தாந்தங்களாக இருப்பவை மிகச் சிலவேயாகும்.

யதார்த்த நிலையினைப் புரிந்துகொண்டு தேவையான மாற்றங்களைச் செய்யும் தகுதிவாய்ந்த அரசியல் குழுவாகத் தான் நாங்கள் பொதுமக்களிடம் இருந்து இவ்வாணையினைப் பெற்றுள்ளோம். இலங்கையின் இறைமையை மீறமுடியாத உரிமையாக நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம். அந்தச் சுதந்திரத்தை அழிப்பதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். இலங்கையின் ஆட்புல ஒருமை 'இலங்கையின் ஒற்றையாட்சி' இலங்கை மக்களின் மனித உரிமைகள் ஆகியவற்றை அழிப்பதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். 1978 ஆம் ஆண்டின் எமது அரசியல் அமைப்புத் திட்டத்தின் மூலம் உங்களுக்குத் தெரிந்தவாறு மனித உரிமைகள், மனித உரித்துகள் மீறமுடியாத கொள்கைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு அவற்றை மீறும்போது நீதிமன்றங்களின் மூலம் அவற்றுக்குப் பரிகாரங்களைக் காண்பதற்கு இயலும்வகையில் நமது அரசியல் அமைப்புத் திட்டத்தை நாங்கள் வரைந்துள்ளோம். அது தான் நாங்கள் திடமாக ஏற்றுக் கொண்டுள்ள அடிப்படையாகும். பொது மக்களது அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டு மேம்பாட்டினைக் கருதி காலத்துக்குக்காலம் யதார்த்தமானதும் செய்முறைக்குட்பட்டதுமான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த நாங்கள் தயார் என்றும் நாம் பொது மக்களுக்குக் கூறினோம்.

இந்த உலகம் சதாமாறிக்கொண்டே இருக்கின்றது. மனிதனும் மாற்றம் அடைகின்றான். மாற்றம் அடையும் உலகத்தில் நாங்கள் மாற்றமடையாதிருக்க முடியாது. யதார்த்த நிலையினைப் புரிந்துகொண்டு நாங்கள் மாற்றமடைதல் வேண்டும். புதிய பிரச்சனைகளுக்குப் புதிய தீர்வுகளைக் காணல் வேண்டும். புதிய பிரச்சனைகளுக்குப் பழைய தீர்வுகள் பொருந்தா. இந்நிலைமையினைப் புரிந்துகொண்டு தான் நாங்கள் இத் தேர்தல்

விஞ்ஞாபனத்தைத் தயாரித்தோம். நமது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்குத் தடையாக வீண்விரயமும் ஊழல்களும் நிருவாக இயந்திரத்தின் உயிரற்ற தன்மையும் இருக்கின்றதென்பதை நாங்கள் கண்டோம். கோப்புகளைப் பெருக்குவதனுல் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது. கிணறு தோன்றுவதற்கென திறக்கப்பட்ட கோப்பு 3 அல்லது 4 அடிகள் வரை அகலமாகவும், ஆழமாகவும் பெருகியிருந்தபோதிலும், அக் கிணற்றை வெட்டுவதற்கு ஒரு மண்வெட்டியைத்தானும் பயன்படுத்தாத நிலையும் உண்டு. அத்தகைய நிருவாகச் சிக்கல்கள், வீண்விரயங்கள், ஊழல்கள், திறமையின்மை ஆகியவற்றை நாம் கண்ணுற்ருேம். அதனுல் தான் நாங்கள் இந்த முறை பதவிக்கு வந்தநாள் தொட்டு நமது செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், ஏனைய நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு, இத்தகைய வீண்விரயங்களையும், ஊழல்களையும் நீக்கி உங்களுடைய அநுபவ அறிவினைப் பயன்படுத்தி உடனடியாகச் சேவைகளை ஆற்றுவதற்கு தயாராய் இருங்கள் என்ற வேண்டுகோளினை விடுத்துள்ளோம்.

நமது அப்பாவி மக்களுள் பலர் நகரங்களிலுள்ள சேரி வீடுகளிலேயே வாழுகின்றனர். கிராமங்களிலோ அவர்கள் குடிசைகளில் வாழுகின்றனர். இலங்கையின் மக்கட் தொகையில் நூற்றுக்கு 85% த்தினர் கிராமப்புறங்களில் வாழுகின்றனர். நாங்கள் அந்த மக்களுக்கு கைகொடுத்து உதவ வேண்டும். மக்கட் தொகையில் சரிபாதியினர் உணவு முத்திரைகளையே நம்பி வாழுகின்றனர். தாக்குதல்கள், இம்சித்தல்கள், மரண அச்சுறுத்தல்கள் இடைவிடாது ஏற்பட்டிருந்த போதிலும் காலையிலேயே வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வரிசையில் நின்று, அடியுதைபட்டு, அந்த மக்கள் தான் பயமின்றி வாக்களித்தார்கள். எனவே தான் அம் மக்களின் எண்ணங்களைப் புரிந்து கொள்வதற்கு நாம் முயன்று வருகின்ருேம். நாங்கள் ஆட்சிக்கு வந்தபின்பு அமைச்சர் பதவிகளைப் பெற்றுக்கொண்ட பிறகு திணைக்களங்களில் தலைவர் பதவிகளைப் பெற்ற பின்னர், அம் மக்களைச் சந்திக்கும் வாய்ப்புகள் அருகி விடுகின்றன. எனவே, இந்தச் சமூகத்தின் மேல்மட்டத்தில் உள்ள சிலரது அபிப்பிராயத்தையே பொதுமக்கள் அபிப்பிராயமாக நாங்கள் வழமையாக ஏற்றுக் கொள்ளுகிருேம்.

இந்நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் செய்தித் தாள்களை வாசிக்கும் வசதியற்றவர்கள். வானெலியைக் கேட்பதற்கு ஓய்வில்லாதவர்கள். தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கு பொருளாதார வளம் இல்லாதவர்கள். அந்த மக்களின் எண்ணங்களை நாங்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். சமுதாயத்தின் மேல்மட்டத்தில் வாழுபவர்களின் அல்லது

சிறப்புரிமைகள் பெற்ற சிலரின் எண்ணங்களை பொதுமக்கள் அபிப்பிராயமாக ஏற்றுக் கொள்ளல் ஆகாது. அந்த வகையிலே நாங்கள் எமது எண்ணப் போக்குகளைச் சிறிது மாற்றிக் கொள்ளல் வேண்டும். வறியமக்கள் ஏதாவதொரு வேலையினை முன்னிட்டு திணைக்களத்துக்கோ, அமைச்சுக்கோ பல இடர்களுக்கிடையில் தான் வருகை தருகின்றார்கள். அவர்கள் சுலபமாக வருகைதந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வசதிகளை நாங்கள் செய்து கொடுத்தல் வேண்டும். அவர்கள் தாண்டிச் செல்லவேண்டிய நிருவாகத் தடைகள் பல இருக்கின்றன. அதிக நேரம் காத்திருக்க வேண்டிய நிலை உண்டு. ஏராளமான மாதிரிப் படிவங்களை நிரப்ப வேண்டிய நிலை உண்டு. இவற்றைப்பற்றி ஓர் ஆராய்ச்சியை மேற்கொள்ளுமாறு நாங்கள் எமது செயலாளர்களுக்குக் கூறி இருக்கின்றோம். நாங்கள் இந்தக் கடிதப் போக்குகளை பெருக்கிய வண்ணமே இருக்கின்றோம். படிவங்களின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. ஒரு கருத்திட்டத்திற்கென ஒதுக்கப்படும் பணத்தில் இருந்து படிவத் தாள்களுக்கு எவ்வளவு செலவிடப்படுகின்றது. அதற்கென எத்தனைக் கோப்புகள் பேணப்படுகின்றன. நிருவாகத் துறையில் காணப்படும் இந்தச் சீர்கேடு காரணமாக, வீதி ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கென ஒதுக்கப்படும் இலட்ச ரூபா தொகையில் இருந்து அவ்வீதியின் கட்டுமான வேலைகளுக்கு எவ்வளவு தொகை செலவிடப்படுகின்றது? நூற்றுக்கு 60% மான தொகை ஊழல்களுக்கும் வீண்விரயத்துக்கும் செலவிடப்படுகின்றது. எனவே, இதனை நன்கு மனதில் கொண்டு நூற்றுக்கு 75%ப் பணத் தொகையினையாவது அக் கருத்திட்டத்துக்காகச் செலவிடக் கூடியவகையில் இவற்றின் நடைமுறைகளைச் சீர்படுத்துமாறு தான் நாங்கள் கூறுகின்றோம்.

இந்த நாட்டின் எஜமானர்களாகிய பொதுமக்களது வியர்வையாலும், இரத்தத்தினாலும், அயராத உழைப்பினாலும் தேடித்தரும் நிதியங்களைக் கொண்டு தான் நாங்களும், நீங்களும் வாழ்க்கை நடாத்தி வருகின்றோம் என்பதை ஒரு கணமேனும் மறத்தல் ஆகாது. நாங்கள் பெற்று வருகின்ற வேதனாதிகளும், மிகையூதியங்களும் அந்த அப்பாவி வறிய மக்களது உழைப்புக் காரணமாகத் தான் கிடைக்கின்றது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும். அந்த வறிய மக்களில் பெருந்தொகையானோர்கள் உணவு முத்திரைகளின் மூலம் கிடைக்கும் சிறிய ஆதாயத்தினைக் கொண்டு உயிர் வாழும் அதேநேரத்தில் நமது உத்தியோகத்தர்கள் சௌகரியமாக வாழுவதற்கும் வழிசமைத்துள்ளார்கள். அந்த வறிய மக்களைப் பற்றி நன்கு கவனிப்பது எங்கள் கடமையாகும். அவர்கள் இடரேதுமின்றி

தமது வேலைகளை நிறைவேற்றிக் கொள்ளத் துணைபுரியும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது எமது கடமையாகும்.

அடுத்த விடயத்தை எடுத்துக் கொள்வோம். அந்த விடயம் நமது நாட்டின் உற்பத்திகளை அதிகரிப்பதாகும். நமது நாடு வளம்மிக்க நாடாகும். நல்ல சீதோஷ்ண நிலை இருக்கின்றது. நல்ல மழை பெய்கின்றது. மக்களும் திறமையானவர்கள். அந்த மக்களைக் கொண்டு இந்த நாட்டின் உற்பத்தித் துறையினை வளமாக்க வேண்டும். கமத்தொழில் உற்பத்திகள், கைத்தொழில் உற்பத்திகள் ஆகியவற்றைப் பொதுமக்களின் உழைப்பினைக் கொண்டு அவர்களின் பங்குபற்றுதலுடன் அபிவிருத்தி செய்தல் வேண்டும். அங்ஙனம் உற்பத்தி அதிகரிக்காவிடின் மேல்மட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கும், ஏனைய உயர்தொழிலளர்களுக்கும் இப்பொழுது அவர்கள் பெற்று வருகின்ற சம்பளத்தைக் கொண்டு வாழ்க்கைச் செலவினைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதற்கும், பணவீக்கத்தைச் சமாளிப்பதற்கும் பணத்தின் மதிப்பிற்கேற்ப உரிய முறையில் தமக்கு வேண்டிய நுகர்வுப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கும், உற்பத்தியினை அதிகரிப்பது இன்றியமையாததாகும். உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பது அத்தியாவசியமாகும்.

நாங்கள் அருந்துகின்ற உணவு வகைகளையும், புடைவை மற்றும் ஏனைய பண்டங்களையும் நூற்றுக்குத் 95% இந்த நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும். அதற்கு வேண்டிய பின்னணி 1977 ஆம் ஆண்டு முதல் எமது அரசாங்கத்தினுல் அமைக்கப்பட்டிருக்கின்றது. நீர்ப்பாசனம், மின்சாரம், நெடுஞ்சாலைகள், உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகள் ஆகிய அடிப்படையான தேவைகள் சம்பந்தப்பட்ட வரையில் 1977 ஆம் ஆண்டு முதல் வேலைகள் பல பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. கைத்தொழில் துறையில் மாபெரும் புரட்சி ஏற்பட்டுள்ளது. இப்பொழுது நமது நாட்டு மக்களை இணைத்துக்கொண்டு வேகமான உற்பத்தியினை குறிப்பாக நம்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருள்களை, புடைவை வகைகளை ஏனைய பண்டங்களை வேகமாக உற்பத்தி செய்தல் வேண்டும். அதற்காகத் தான் நாங்கள் சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளோம். சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் பஞ்சப் படியொன்றை வழங்குவதற்கு நடைமுறைப்படுத்தப்படும் ஒரு திட்டமன்று. இன்று நாங்கள் மறந்துள்ள உழைப்பாற்றல் ஒன்று நம்நாட்டில் இருக்கின்றது. நூற்றுக்கு 50 ற்கும் மேற்பட்ட மக்கள் உணவு முத்திரைகளை நம்பி வாழுகின்றுர்கள் என்பதன் அர்த்தம் நமது மதிப்புமிக்க மாபெரும் வளமான மனித வளத்தை நாங்கள்

பயன்படுத்தாமல் வாளாதிருப்பதாகும். அக்குறைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்காகத் தான் சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளோம். உற்பத்திப் பணியில் மக்களைப் பங்குகொள்ளச் செய்வதற்குத் தான் சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கருதி உள்ளோம்.

முதலாவதாக பொதுமக்களை உடலுறுதி கொண்ட நிலைக்குக் கொணரல் வேண்டும். அங்ஙனம் உடல் வளம் பெறுகின்ற பொதுமக்களைக் கொண்டே உற்பத்தி வளத்தையும் பெருக்குதல் வேண்டும். அந்த ஒரேயொரு வழியால் தான் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும் சம்பளத்தை நாடி வாழும் அல்லது வேறு ஆதாயங்களை நாடி வாழும் மக்களது வருமான நிலையினை உயர்த்தவும் வசதியான வாழ்க்கை நிலையினை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும். உற்பத்தியினை அதிகரிக்காமல் சம்பளங்களை அதிகரிப்பதன் மூலம் பணவீக்கம் அதிகரிப்பதன்றி என்றுமே வாழ்க்கைச் செலவுக்கு பரிகாரம் காண முடியாதென்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்கள். இது நமது அரசாங்கம் ஏற்றுக் கொண்ட முக்கியமான சித்தாந்தமாகும். உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்தின் முதலாவது படிநிலையாக நிருவாக இயந்திரத்தை ஆற்றல் மிக்கதாக ஆக்குவது இன்றியமையாததாகும். அங்ஙனம் செய்வதற்கு ஊழலும், வீண்விரயமும் தடுக்கப்படல் வேண்டும். மக்கள் எளிதில் தமது வேலைகளை முடித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அதனை அடுத்து உற்பத்தியினை அதிகரித்தல் வேண்டும். இரண்டாவதாக, உற்பத்தியினை வேகப்படுத்தல் வேண்டும். அங்ஙனம் அவற்றை அபிவிருத்தி செய்து, அவற்றை விரிவாக்கி பொதுமக்களை உற்பத்தியில் பங்குகொள்ளச் செய்தல் வேண்டும்.

மேற் சொல்லியவற்றின் அடிப்படையில் நோக்குமிடத்து, தேர்தல் விஞ்ஞாபனம் பொருள்பொதிந்த விஞ்ஞாபனமாக இருப்பதைக் காணலாம். இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் சுதந்திரம் உங்கள் அனைவருக்கும் உண்டு. தத்தமது அநுபவங்களுக்கு ஏற்பவும், தத்தமது எண்ணங்களுக்கு ஏற்பவும் அந்தந்த மாகாணங்களின், அந்தந்தப் பிரதேசங்களின் தேவைகளை மனதிற் கொள்ளும் சுதந்திரம் உங்களுக்கு உண்டு. நமது நிருவாக இயந்திரத்தை இயன்றளவு பன்முகப் படுத்தும்போது தான் அப்பணியை இனிது நிறைவேற்ற முடியும். இந்த நிருவாக இயந்திரமானது கிராம மட்டத்துக்கே பன்முகப்படுத்தப்படல் வேண்டும். ஒரேமையத்தில் குவிந்திருக்கும் பணிகள் பல பன்முகப்படுத்தப்படல் வேண்டும். பொதுமக்கள் இந்த நாட்டின் எஜமானர்களாக, ஆளுநர்களாக இருக்கும்போது அவர்களுடைய வீட்டு முற்றத்துக்கே நிருவாகம் வந்துள்ளது

என்னும் உணர்ச்சி அவர்களிடம் ஏற்படல் வேண்டும். சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பொருட்டு 30,000 சிறு கிராமங்கள் இருக்க வேண்டுமெனத் திட்டமிட்டதற்குக் காரணமும் அதுவே தான். எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தின்படிஅரசாங்கத்தை நிறுவி ஒரு வருடத்துக்குப்பின்பு தான் சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நாங்கள் அவ்வளவு காலம் காத்திருக்க மாட்டோம். இந்தச் செத்தெம்பர் மாத இறுதியிலேயே நாம் அதனை ஆரம்பிக்கப் போகின்றோம். இந்த நிகழ்ச்சித் திட்டத்தை 11 வட்டங்களைக் கொண்டு நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தக் கருதுகின்றோம்.

முதலாவது வட்டத்துக்கு நாட்டில் உள்ள மாவட்டங்களிலிருந்தும் உதவி அரசாங்க அதிபர் பகுதியொன்று என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும். மிகவும் வறிய மக்கள் வாழுகின்ற அஃதாவது உணவு முத்திரைகளை நம்பிவாழும் பலர் இருக்கின்ற உதவி அரசாங்க அதிபர் பகுதிகளைத் தேர்ந்தெடுப்போம். அடுத்த வட்டத்துக்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், அடுத்ததாக வறுமைமிக்க மக்கள் அதிகமாக உள்ள உதவி அரசாங்க அதிபர் பகுதிகளைத் தேர்ந்தெடுப்போம். இங்ஙனம் 11 வட்டங்கள் நிறைவு பெறும்போது உதவி அரசாங்க அதிபர் பகுதிகள் யாவற்றையும் தேர்ந்தெடுத்து முழுநாட்டிற்கே இந்த உதவித்திட்டத்தின் பயனைப் பெறும் வாய்ப்பு ஏற்படுகின்றது. உணவு முத்திரைகளால் வாழும் மக்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 2500/- பெறுமதியான வளம் கிடைக்கின்றது. அப்பணத்திலிருந்து வீட்டுப் பாவனைக்காக ரூ. 1458/- செலவிடப்படல் வேண்டும். ஏனைய ரூ. 1042/- சேமிப்புக்காகும். அக்காலப் பகுதியினுள்ளே அவ்வறிய மக்கள் சிறு கிராமங்கள் அடிப்படையில் அவர்களது வெறுப்பு விருப்புகளுக்கேற்ப உற்பத்தித் துறைகள் பலவற்றில் பயிற்சி பெறுவதற்கு ஆற்றுப்படுத்தப்படுவார்கள். அவர்கள் வர்த்தக நாட்டம் கொண்டவர்களாக இருக்கலாம். அல்லது கமத்தொழில் நாட்டம் கொண்டவர்களாக இருக்கலாம். அல்லது கைத்தொழில் நாட்டம் கொண்டவர்களாகவும் இருக்கலாம். அந்தந்த குடும்பங்களில் வளரும் பருவத்திலுள்ள வாலிபர்களின் விருப்பத்திற்கேற்பவும் அவர்களது திறமைக்கேற்பவும் பல துறைகளில் ஈடுபாடு கொண்டு பயிற்சி பெறுவதற்கு அவர்கள் வழிநடத்தப்படுவார்கள். இந் நிகழ்ச்சித் திட்டத்தில் எல்லா அமைச்சுகளுக்கும் குறிப்பிட்டவொரு பணியுண்டு. இதன் வெற்றிக்காக எல்லா அமைச்சுகளையும் எல்லாத் திணைக்களங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் யாவரும் அஃதாவது நாட்டிலுள்ள உத்தியோகத்தர்கள் அனைவரும் இதற்கு ஆதரவு அளித்து நிருவாகத் தடைகளை நீக்குவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

முதல் 2 வருடங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்நடாத்த முடியுமாயின் நமது பொருளாதாரம் பெரிதும் மாற்றமடைவது திண்ணம். இலங்கையின் பொருளாதாரம் மிக்க நெருக்கடி நிலையை நோக்கியுள்ளது எனவும் அது மிகவும் தீவிர நிலையை அடைந்துள்ளது எனவும் பலர் அச்சமடைந்திருக்கின்றனர் என்பதை நான் அறிவேன். அந்த வியாதிக்கு இன்னும் பல நோய் அறிகுறிகள் உண்டு. அந்த நோயின் மேல்மட்டத்தின் அறிகுறிகளுக்கு ஏற்றவாறு மருந்து கொடுக்கப் போனல் நோய் குணமடையாது. அந்த வியாதிக்கு ஏதுவான நோயின் காரணத்தை நாங்கள் கண்டுபிடித்துள்ளோம். அதற்குரிய பரிகாரம் உற்பத்தியாகும். எனவே, உற்பத்தியினை வேகப்படுத்தல் வேண்டும்.

கடந்த 11 ஆண்டுகளில் நாங்கள் அதற்கு வேண்டிய அத்திவாரத்தை ஏற்படுத்தியுள்ளோம். இப்பொழுது பொதுமக்களையும் இணைத்துக்கொண்டு அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும். அதன் வெற்றி நிருவாகத்தின் திறைமையினைப் பொறுத்து உள்ளது. வீண்விரயத்தினையும், ஊழல்களையும் தடுப்பதனுல் தான் அதனைச் செய்ய முடியும். வேதனங்களைப் பெறுகின்ற அரசாங்க சேவையாளர்கள், கூட்டுத்தாபனப் பணியாளர்கள், உள்ளூராட்சி ஊழியர்கள் ஆகிய நாம் அனைவரும் தியாக மனப்பான்மையோடு பணிபுரிதல் வேண்டும். அப்பொழுதுதான் இத் திட்டத்தின் பயன்களைக் கொண்டு நாமனைவரும் மனநிறைவு கொள்ளமுடியும். இன்று இந்த நாட்டில் பயங்கரமான நிலை இருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியும். பலவிதமான நாசகாரச் செயல்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. அந்த நாசகாரச் செயல்கள் எங்களை அடிமைப்படுத்திக் கொள்ள இடமளிப்போமா அல்லது நாம் அந்த நாசகாரச் செயல்களை வெல்லுவோமா என்பதே நாம் இப்பொழுது சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

வேலைக்கு வரவேண்டாமென எவரும் தொலைபேசி மூலம் கூறிவைத்தால் அச் செய்தியைப் பெற்றுக் கொண்டவர் வேலைக்கு வராமல் இருப்பதோடல்லாமல் மற்றவர்களுக்கும் அதனைத் தெரிவிப்பார். "எனக்கு தொலைபேசி மூலம் செய்தியொன்று கிடைத்தது, எனவே நீங்களும் போக வேண்டாமெனக் கூறுவர். அப்பொழுது மற்றவரும் போகமாட்டார். ஆயினும் வேதனதிகளுக்குக் காத்து நிற்பார். யார் வேதனதிகளை வழங்குவார்கள் அந்தக் குடிசைகளிலும் சேரி வீடுகளிலும் வாழ்ந்து கொண்டு இருக்கும் அப்பாவி மக்கள் வியர்வையைச் சிந்தித் தான் அந்த வேதனதிகளை வழங்குவதற்கு வேண்டிய வருமானத்தை ஈட்டித் தருவார்கள். ஒரு கடிதத் துண்டினை

பெற்றுக் கொண்டேன் எனக் கூறி வேலைக்கு வராமல் வீட்டிலேயே தங்குகின்றார்கள். நாங்கள் அனைவரும் இதுபற்றி ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். நாங்கள் சேவைக்காகவே எங்களை அர்ப்பணித்துக் கொள்ளல் வேண்டும். ஒருவர் மோட்டார் வண்டியில் பிரயாணம் செய்யின் கிரக நிலையின்படி இடைவழியில் திடீர் விபத்துக்கு உள்ளாகலாம் எனச் சோதிடர் கூறியிருந்தால் அவரால் கடைப்பிடிக்கப்படக் கூடிய இரண்டு வழிகள் உண்டு. ஒன்று, நடப்பது நடக்கட்டும் என அந்தப் பயணத்தை மேற்கொள்வது. அல்லாவிடின் வீடடுக்குள்ளேயே பதுங்கியிருப்பது. இந்த வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் நிகழக் கூடும். நாங்கள் அவற்றுக்கு அடிமையாவதா? அல்லது நாங்கள் அவற்றை அடிமைப்படுத்திக் கொள்வதா என்பது, அனைவரும் எதிர்நோக்க வேண்டிய சவாலாகும்.

சிந்தித்துப் பாருங்கள், துப்பாக்கிக்குப் பயந்து வேலை செய்வதை நிறுத்துவோமானால் அத் துப்பாக்கி வெற்றிவாகை சூடிய நாளில் அதே துப்பாக்கி வேலைக்குச் செல்லுமாறு உங்களுக்குக் கட்டளையிடும். அத்தகைய சூழலில் தொழிற்சங்க உரிமைகள், நியாயமான கோரிக்கைகள், நிருவாக ஒழுங்கு விதிகள், நிதிப்பிரமாணங்கள் ஆகியவை உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கமாட்டா. இதோ துப்பாக்கி இருக்கின்றது. '8 மணித்தியாலங்கள் அல்ல 24 மணித்தியாலங்கள் வரை வேலை செய் என்று கூறிவிடும். அப்பொழுது ஊர்வலங்களிலோ ஆர்ப்பாட்டங்களிலோ ஈடுபட முடியாது. அப்பொழுது கோரிக்கைகள் சமர்ப்பிக்க முடியாது. எனவே, அச்சுறுத்தல்களைக் கண்டு பின்வாங்குவோமானால் நாம் இன்று பொறுப்பு வகிக்கும் பதவிகளை அணிசெய்வதற்கு தகுதியற்றவர்கள் ஆவோம்.

நிருவாகத் துறையினைச் சேர்ந்த ஏராளமானோர் எங்களை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். எங்களைப் பின்பற்றுவதற்கு தயாராய் இருக்கின்றார்கள். எனது தலைவர் போகமாட்டார், நான் போவது எதற்காக என்று கேட்பார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு தலைவர் உண்டு. அனைவரும் இந்தத் தலைவருடைய செயல்களைக் கவனித்த வண்ணமே இருக்கின்றார்கள். எனவே, நாங்கள் முன்மாதிரியாக நடந்து கொள்ளல் வேண்டும். வளமையான காலங்களில் முதலாவதாக அலுவலகத்துக்குச் செல்பவர் யார்? யாவருக்கும் முன்பாக காரியாலயத்துக்குச் செல்பவர்கள் யார்? அந்தந்த அலுவலகங்களில் பணிபுரியும் சிற்றூழியர்களே. அனைவருக்கும் முன்னர் அலுவலகங்களுக்குச் செல்வார்கள். அலுவலகத்தை அடைத்துவிட்டு திறப்புகளை பொலிசிடம் ஒப்படைப்பவர்களும் இந்தச் சிற்றூழியர்களே. இது தவறான நடைமுறையாகும். இதனை மாற்ற வேண்டும். தலைவரே

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

யாவருக்கும் முன்னர் அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும். அவரே தலைமைத்துவத்தைக் கொடுக்க வேண்டும். அத்தகைய தலைவரைத் தான் பெரியவராகக் கொள்ளலாம். யாவருக்கும் முன்பாக வேலைத்தளத்துக்குச் செல்லவேண்டியவர்களும் அலுவலகத்துக்குச் செல்ல வேண்டியவர்களும் நீங்கள் தான். உங்களுக்கு வாகனங்கள் இருக்கின்றன. கார் வண்டிகள் இருக்கின்றன. ஏனைய வசதிகளும் இருக்கின்றன. அலுவலகங்களுக்கு நீங்கள் செல்லாவிடின் நடந்து அல்லது பேருந்து வண்டியின் மூலம் பல மைல்களைக் கடந்து வரும் பணியாளர் வேலைக்கு வருவது எங்ஙனம்? குறிப்பிட்ட அலுவலகம் ஒன்றில் வாகன வசதிகள் உள்ள உயர்உத்தியோகத்தர்கள் சிலர் இருப்பின் போக்குவரத்துத் தடைகள் ஏற்படும்பொழுது அந்த மோட்டார் வண்டிகள் உள்ள உத்தியோகத்தர்களோடு கலந்தாலோசித்து அந்த வாகனங்களின் மூலம் வாகனங்கள் இல்லாத ஊழியர்களையும் கொண்டு செல்வதற்கு ஆவன செய்தல் அவ்வலுவலகத்துத் தலைவரின் கடமையாகும். நாடு வளமடைய வேண்டுமானால் அத்தகு திறமை வாய்ந்த அலுவலக நடைமுறை அவசியமாகும்.

இந்தச் சிறிய விடயங்களை அசட்டை செய்வதன் காரணமாகத் தான் பொருளாதார நெருக்கடி ஏற்படுகின்றது. இவற்றைப் பற்றி ஆலோசனைகள் வழங்குவதற்கு நமக்கு சர்வதேச அமைப்பாண்மைகளைச் சேர்ந்த உசாத் துணையாளர்கள் தேவைப்படுவதில்லை. உங்களுக்குள்ள திறமைகளுக்கு நிகரானவர்கள் வேறெவருமில்லை. உலகத்தில் வீழ்ச்சியடைந்த நாடுகள் உயர்வடைந்த வரலாறு உங்களுக்குத் தெரியும். நீங்கள் வெளிநாடுகளுக்கு ஏன் செல்கின்றீர்கள்? கடந்த 11 ஆண்டுகளில் திணைக்களத் தலைவர்கள் வெளிநாடு செல்லக் கோரியபோது அவ் விண்ணப்பங்களை நான் அங்கீகரித்துள்ளேன். எவ்வளவு பேர் வெளிநாடு சென்றிருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியும். அந்த நடைமுறையினை மாற்றுமாறு நான் பிரதம அமைச்சருக்குக் கூறியுள்ளேன். இதன் பின்னர் திணைக்களம் ஒன்றிலிருந்து ஒருவர் ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கு வெளிநாடு செல்வதாயின் எனது அனுமதியைப் பெற்று அங்கீகாரமளிக்குமாறு நான் பிரதம அமைச்சருக்குக் கூறியுள்ளேன். அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று திரும்பியபின்னர் இந்த நாட்டில் எதை நடைமுறைப்படுத்தியிருக்கின்றார்கள் என்பதை நான் ஆராய்ந்து பார்ப்பேன். புலமைப் பரிசில்கள் பெற்றுச் செல்வதாகக் கூறிச் செல்வார்கள். மாநாடுகளுக்குச் செல்வதாகக் கூறிச் செல்வார்கள். பேச்சுவார்த்தைகளுக்குச் செல்வதாகக் கூறிச் செல்வார்கள். ஓராண்டு காலத்தில் 7 அல்லது 8 முறை செல்வார்கள். அப்படிச்

சென்றவர்களும் எவராவது தொலைபேசி மூலம் பேசினால் வீட்டிலே தங்கியிருப்பார்கள், வேலைக்கு வரமாட்டார்கள். ஆயினும் எல்லாச் சிறப்புரிமைகளையும் அநுபவித்து வருகின்றார்கள். பல அச்சுறுத்தல்களுக்கு இடையில் வேலைக்கு வந்தவர்கள் எனக்குப் பின்வருமாறு கூறுகின்றார்கள். "சேர், இது பெரிய விந்தையாய் இருக்கின்றதே! அதிக சம்பளத்தைப் பெறுபவர்களும், அதிக சிறப்புரிமைகளைப் பயன்படுத்திக் கொள்பவர்களும் அதிகம் வெளிநாடுகளுக்குச் செல்பவர்களும் நாங்கள் அல்ல. ஏனையோர் ஆவர். ஆனால் நெருக்கடி நிலையில் மாடாய் உழைப்பவர்கள் நாங்களே. நெருக்கடி நிலையில் எங்களுக்குத் தலைமைத்துவம் கொடுப்பதற்கு ஒருவருமில்லை". உங்களுக்கு இடர்கள் பல இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். சில சமயங்களில் மனைவி, மக்கள் பயத்தால் நடுங்குகின்றனர். அச்சுறுத்தல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டும் உள்ளன. அங்ஙனமாயின் நாங்கள் இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். கடமையினைப் புரிவோமா அல்லது பயந்து வீட்டிலேயே பதுங்கியிருப்போமா, இந்த இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அங்ஙனம் தேர்ந்தெடுத்து அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுங்கள். திணைக்களத் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்ளுங்கள். அதனால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எனக்குத் தெரியும். இந்தப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டது இதனைக் கைவிட்டு ஓடுவதற்கு அல்ல. நம்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள கவலைக்கிடமான நிலையினின்று இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காகத்தான் நான் இந்தப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன். அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நான் எண்ணியுள்ளேன் என்பதையும் உங்களுக்குக் கூறுகின்றேன்.

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வாசித்துப் பாருங்கள். முதலாவதாகச் சமாதானம், இரண்டாவதாகக் கட்டுப்பாடு; மூன்றாவதாக சுபீட்சம். சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்குச் சமாதானமும், கட்டுப்பாடும் இன்றியமையாதவை. நான் அதனை எங்ஙனம் சாதிக்கப்போகின்றேன். துப்பாக்கி முனையாலும், பைநெற்றினாலும் அல்ல. கலந்தாலோசிப்பதன் மூலமாகவும், சம்பந்தப்பட்டவர்கள் அனைவரினதும் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்வதன் மூலமாகவும் தான் நான் அதனைச் சாதிக்கப் போகின்றேன் என்பது உங்களுக்கும் தெரியும். இவற்றைச் செய்வதனால் பயனில்லை என்றும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும் எனவும் சிலர் கூறுகின்றார்கள். அவ்வாறு கூறுபவர்களே வேலைக்கு வராமல் இருக்கின்றார்கள். சிலபேர் வேலைக்கு வராமல் வீட்டிலே தங்கியிருக்கின்றார்கள். பொய்யான தொலைபேசிச் செய்திகளை கொடுப்பார்கள். திணைக்களத்தின்

உள்ளேயே இருந்துகொண்டு அத் தொலைபேசிச் செய்திகளைக் கொடுப்பார்கள். ஒரு முனையிலிருந்து மறுமுனைக்குத் தொலைபேசி மூலம் கதைப்பார்கள். நாளைக்கு வரவேண்டாம், வந்தால் கொலை செய்யப்படுவீர்கள். அங்ஙனம் தொலைபேசிச் செய்திகளைக் கொடுத்தவர்கள் சிலர் கையும் மெய்யுமாக அகப்பட்டுள்ளார்கள். இப்பொழுது இது பரவுகின்றது. பொய்யான கடிதங்களை அனுப்புகின்றார்கள். அன்றைக்கு எவரும் வேலைக்கு வரமாட்டார்கள். முதலாவதாக வேலைக்கு வராமல் இருப்பவர் நிறுவனத்தின் தலைவராவர். அடுத்தபடியாக, அவருக்கு அடுத்ததாக உள்ளவர் வரமாட்டார். அடுத்தபடியாக, அவருக்கு அடுத்ததாக உள்ளவரும் வரமாட்டார். இவற்றுக்குத்தானா இந்த உயர்ந்த வேதனாதிகள் வழங்கப்படுகின்றன? இவ்வாறு செய்வதற்காகவா நீங்கள் பட்டங்களைப் பெற்றுள்ளீர்கள்? இவற்றுக்காகவா இந்தப் பயிற்சிகளைப் பெற்றுள்ளீர்கள்? இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யுங்கள். உங்கள் பிழைப்புக்கு ஆதாரமாக உள்ள மக்களுக்காகத் தியாக மனப்பான்மையோடு சேவை செய்வதா அல்லது அச்சமும் பீதியும் உற்று நடுநடுங்கி வீட்டிலேயே உத்தியோகம் இல்லாது இருப்பதா என்பதை நீங்கள் தெரிவு செய்தல் வேண்டும்.

எங்கள் கட்சியின் சார்பில் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட நான் முன் வந்தபோது இந்த இடர்மிகுந்த நிலையினை நன்கு புரிந்துகொண்டிருந்தேன். அதன் இடரார்ந்த தன்மையினை நன்கு புரிந்து கொண்டுதான் அப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன். எனவே, என்மீது முக்கிய கடப்பாடு சுமத்தப்பட்டுள்ளது. அக்கடப்பாடு யாது? நாட்டு மக்கள் எனக்கு வழங்கிய ஆணையின்படி இப்பொழுது நம்நாடு இருக்கும் அவல நிலையிலிருந்து நம்நாட்டை மீட்பது தான் அந்த மாபெரும் கடமையாகும். அதனை நிறைவேற்றுவதற்கு சிறந்ததோர் வேலைத் திட்டமும் இருக்கின்றது. எனக்கு 2 ஆண்டு காலத்தைக் கொடுக்க முடியுமாயின் இலங்கையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியவரும். இது வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வேலைத் திட்டமாகும். குற்றம் குறைகளைக் காண்பது மிகவும் எளிதான காரியமாகும். பிறருடைய தவறுகளைக் காண்பதும் மிக எளிது. நாம் இழைக்கும் தவறுகளைப் பற்றி நாம் சிந்திக்க மாட்டோம். எங்கள் கவனக்குறைகளை ஆய்ந்தறிந்து அவற்றை அகற்றுவதற்கு நாம் முயலுவதில்லை, ஆனால் மற்றவர்மீது பிழையினைச் சுமத்திவிட்டு இருப்பதற்குத் தான் எப்பொழுதும் நினைப்போம். ஏனையோர் செய்யும் பிழைகளுக்காக நாம் அவர்களிடமிருந்து காரண விளக்கம் கூறுமாறு பணிப்போம். ஆனால் நாம் செய்யும் தவறுகளை மறைத்துவிடுவோம்.

சில நாட்களுக்கு முன்னர் என்னைச் சந்திக்க ஒரு குழுவினர் வந்து, மிகவும் முக்கியமான விடயத்தை எடுத்துரைத்தார்கள். தங்களுக்கு இடர்கள் பலவும் அச்சுறுத்தல்கள் பலவும் உண்டென்று அவர்கள் கூறினார்கள். அவற்றுக்கு மத்தியில் தாம் வேலை செய்யும் பிரிவினைச் சேர்ந்த ஒருவர் எடுத்த நடவடிக்கையொன்றைப் பற்றியும் என்னிடம் தெரிவித்தார்கள். அவருக்கு அடுத்ததாகப் பதவியிலிருப்பவர் அலுவலகத்துக்கு வந்து புத்தகத்தில் கையொப்பமிட்டுவிட்டு, அச்சுறுத்தல் ஒன்று இருப்பதாகக் கூறி கையொப்பமிட்டாலும் வேலை செய்ய இயலாது எனக் கூறினாராம். அப்பொழுது வேலைசெய்யமுடியாதாயின் புத்தகத்தில் கையொப்பமிட்டது தவறு என்று நிறுவனத்தின் தலைவர் சுட்டிக்காட்டினாராம். வேலை செய்யாமல் இருப்பதாயின் அவருடைய கையொப்பத்துக்கு எதிரே, வேலை செய்யவில்லை என எழுதுவேன் எனத் தலைவர் கூறினாராம். அப்படியாயின் நான் வேலை செய்வேன் எனக் கூறி வேலை செய்யத் தொடங்கினாராம். அவர் 'எடுத்த நடவடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்த அடுத்ததாகப் பதவி வகிப்பவரும் வேலை செய்யத் தொடங்கினாராம். அதன் பின்னர் அவருக்கு அடுத்ததாக இருப்பவரும் வேலை செய்யத் தொடங்கினாராம். அன்று நூற்றுக்கு 75% மானோர் வேலை செய்தார்களாம். தலைமைத்துவத்தின் மகிமையைப் பாருங்கள். நமது நீதிமன்றங்களைச் சேர்ந்த நீதவான் ஒருவர் (பெண் நீதவான்) உயர்ந்த முன்மாதிரியைக் காட்டியுள்ளார் என்பதை நான் அறிந்து கொண்டேன். அந்த நீதவான் நீதிமன்றத்துக்குச் சென்றபோது இதேமாதிரி பிரச்சனையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. நீதிமன்றத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் புத்தகத்தில் தனது கையொப்பத்தை இட்டு வேலை செய்ய முடியாது எனக் கூறினாராம். அதற்கு அந்த நீதவான் அங்ஙனமாயின் அதற்கு நான் பொறுப்பாளியல்ல, வேலைகள் செய்யப்படல் வேண்டும், ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைகளைச் செய்து முடித்தல் வேண்டும், வழக்குகளைப் பின்போடுவதற்கு நான் தயாராக இல்லை என்று அந்த பெண் நீதவான் கூறியுள்ளாராம். மேலும் "நான் இங்கு இறந்தாலும் என்ன, வீதியில் இறந்தாலும் என்ன, வீட்டில் இறந்தாலும் என்ன, எல்லாம் ஒன்று தான். நான் எனது கடமைகளை ஆற்றுவதற்குத் தான் இங்கு வந்தேன், அதனைச் செய்தே தீருவேன்" எனக் கூறினாராம். அது மிகவும் துணிச்சல் வாய்ந்த முன்மாதிரியாகும். இங்ஙனம் துணிச்சலுடன் கடமையாற்றியவர்கள் பலர் பற்றிய செய்திகள் என்னிடம் வந்துகொண்டே இருக்கின்றன.

ஆதலால் நீங்கள் அனைவரும் தலைமைத்துவம் கொடுத்தல் வேண்டும். இன்று நீங்கள் செயலாளர்களாகச் சேவைக்கு

அமர்த்தப்பட்டு இருக்கின்றீர்கள். திணைக்களத் தலைவர்களாகவும், கூட்டுத்தாபனத் தலைவர்களாகவும் சேவைக்கு அமர்த்தப்பட்டு உள்ளீர்கள். அப்படியாயின் சிறந்த தலைவர்களாகச் சேவையாற்றுங்கள். இத்தகைய தருணத்தில் அத்தலைமைத்துவத்தை வகிக்க முடியாதெனின் வேறெந்த நாளில் அத் தலைமைத்துவத்தைக் கொடுக்க முடியும். அங்ஙனம் தலைமைத்துவம் கொடுக்க முடியாவிடில், ஆண்டவனின் பெயரால் இந்தப் பொறுப்பினை வேறொருவரிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்லுங்கள். அதிலே ஒரு தவறும் இல்லை. அங்ஙனம் செய்வது கண்ணியமான செயலாகும். உங்களுக்கு இயலாதாயின் அடுத்ததாக உள்ளவர் நியமிக்கப்படுவார். அவரும் இல்லாவிடின் அவருக்கு அடுத்ததாக உள்ளவர் நியமிக்கப்படுவார். நிருவாகம் இடையறாது செய்யப்படல் வேண்டும். விலகிச் செல்வதற்கு விருப்பமில்லையாயின் தமது கடமைகளைச் சரியாக நிறைவேற்றுங்கள். இது என்னுடைய பணிப்புரை அல்ல. இந்நாட்டின் எஜமானர்களாகிய பொதுமக்கள் எனக்கு வழங்கியுள்ள ஆணையாகும். அம் மக்களது கையில் இருக்கும் ஒரு கருவியே நான். அந்தக் கடமையினை நிறைவேற்றும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டு உள்ளது. அப் பொதுமக்களின் அபிப்பிராயங்களை உங்களிடம் தெரிவிக்கவும், அவற்றை நிறைவேற்றவும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

நாங்கள் செய்யும் எல்லாச் செயல்களுக்கும் ஓர் எதிர்ச்செயல் உண்டு என்பதை எமது ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும். கடந்த காலத்தில் நடாத்தப்பட்ட வேலைநிறுத்தமொன்றில் ஈடுபட்டிருந்தவர்கள் சிலர் எனக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்கள். அந்தக் கடிதத்தை அஞ்சல் மூலமாகவே அனுப்பியிருந்தார்கள். அவர்களில் ஒருவர் இரண்டுவாரங்களுக்குப் பின்னர் தொலைபேசி மூலம், அவர் எனக்குக் கடிதம் அனுப்பியதாகவும், அதற்குப் பதில் வரவில்லை எனவும் கூறினார். எப்பொழுது அனுப்பப்பட்டது என நான் கேட்டபோது சமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் என அவர் பதிலளித்தார். அது நடக்காத காரியமாக இருக்கலாம் எனவும், எனக்கு கிடைக்கும் கடிதங்கள் யாவற்றுக்கும் அவை கிடைத்தமையைப் பற்றியும், கோரியிருந்த உதவியைச் செய்ய முடியுமாயின் முடியும் எனவும் செய்ய இயலாததாயின் இயலாது எனவும் பதிலளிப்பது எனது வழக்கமாகும் எனவும் நான் அவருக்குக் கூறினேன். அந்தக் கடிதத்தை அனுப்பி இரண்டு வாரங்கள் கழிந்துள்ளன என அவர் கூறினார். அப்படியாயின் தபாலில் அது தொலைந்திருக்கலாம் என நான் கூறியபோது அவர்கள் செய்து வந்த வேலைநிறுத்தத்திற்குத் தபால் நிலையங்களும் ஒத்தாசை புரிய முன்வந்திருந்தது அவருடைய

ஞாபகத்துக்கு வந்தது. உங்களுடைய வேலை நிறுத்தத்துக்கு அஞ்சல் திணைக்களமும் ஆதரவு அளித்ததா என நான் கேட்டேன். அப்படியாயின் அந்தக் கடிதம் இன்னும் தபால் அறையில் இருக்கலாம். இதனால் நீங்கள் செய்த செயல் காரணமாக ஏற்பட்ட எதிர்ச்செயலை நீங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது, அதன் விளைவு என்ன? அந்த விளைவுக்கு நீங்களே பொறுப்பு ஏற்றல் வேண்டுமென நான் கூறினேன்.

எங்களோடு வேலை செய்பவர்களுக்கு இத்தகைய சம்பவங்களைப் பற்றி நாங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். எனவே, நாங்கள் ஒழுங்கானவற்றைச் செய்ய பயப்படத் தேவையில்லை என நான் கூற விரும்புகின்றேன். நீதியானவற்றைச் செய்வது தான் தமது கடமையாகும். பயம் காரணமாக நாம் தீர்வுகளைத் தேடல் ஆகாது. அதேபோன்று, தீர்வுகளைத் தேடுவதற்கு பயப்படுதலும் ஆகாது. பீதியும் அச்சமும் ஆகிய இரண்டு நோய்களே நம்மைத் தாக்கும் மிகக் கொடிய தொற்று நோய்கள் ஆகும். நாம் இப்பொழுது ஏற்றுக் கொண்டுள்ள இந்தப் பொறுப்புகளின் காரணமாக, இன்னல்களும் இடர்களும் ஏற்படுவது இயல்பு.

நாங்கள் அனைவரும் இந்த மண்டபத்தில் இப்பொழுது கூடி இருக்கின்றோம். ஆனால் இந்தக் கட்டிடம் இடிந்து விழுந்தால் அல்லது இந்த மண்டபத்துக்கு வெடிகுண்டினை வீசினால் நமக்கு என்னவாகும்? வாழ்க்கையின் எதிர்பாராத தன்மை அப்படித்தான். நாங்கள் பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்தபோது எங்கள்மீது வெடிகுண்டுகளை வீசினார்கள். நமது அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் காயமுற்றார்கள். சிலர் மரணமடைந்தார்கள். அதனை அடுத்து வேலைகளை நாங்கள் கைவிட்டோமா? அங்ஙனம் செய்ய முடியாது. நாம், நமது நாட்டு மக்களுக்குப் பதில் கூறும் தகவுடையவர்கள் ஆவோம். நமது மக்கள் தான் நம்மைப் பராமரிப்பவர்கள். ஆதலால் திடசங்கற்பம் கொண்டு சேவையாற்றும்படி நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்த அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை வழங்கியிருக்கின்றார்கள். வறுமையினைக் குறைப்பதற்கு அல்லது அதனைமுற்றாகவே ஒழிப்பதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ள செயல்திட்டம் தான் இத் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மிக முக்கிய அமிசம் ஆகும். வறுமை ஒழிப்புக்கான ஒரேயொரு வழியும் இத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ளது. அது தான் உற்பத்தியின் அதிகரிப்பாகும். அந்த உற்பத்தி வேலைகளுக்கு பொதுமக்களையும் தொடர்புபடுத்திக் கொள்ளல் வேண்டும். அத்தகைய வேலைக் கிட்டக்குக்கு அடிக்களமாக அமையும்

அடிப்படைத் தேவைகள் கடந்த 11 ஆண்டுக் காலத்தில் நமது அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வறுமையின் ஒழிப்புக்காக வீண்விரயத்தினையும், ஊழல்களையும், திறமையின்மையினையும் புறக்கணித்தல் வேண்டும். இப் பணியை நிறைவேற்றுவதற்காக நாங்கள் முன்மாதிரியாக நடந்து கொள்ளல் வேண்டும்.

நெருக்கடி நிலையொன்று தலைகாட்டியிருப்பதாயின் அதற்குரிய காரணங்களை ஆய்ந்தறிய வேண்டும். அது எங்கள் பொறுப்பாகும். அது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதனை நாம் செய்து வருகின்றோம். நெருக்கடி நிலையினைத் தடுப்பதற்கு நாங்கள் முயன்று வருகின்றோம். அந்த நெருக்கடி நிலைக்கு ஏதுவான காரணங்களை நீக்குவதற்கும் நாங்கள் ஆவன செய்து வருகின்றோம். திறந்த மனப்பான்மையோடு அல்லது, அணிசேராக் கொள்கையோடு பணிபுரிவதன் முக்கியத்தை அதனால்தான் நான் வற்புறுத்தி வருகின்றேன். இந்த நெருக்கடி நிலை காரணமாகப் பாதிக்கப்படுபவர்கள் அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் மாத்திரமல்லர். நாம் அனைவரும் பாதிக்கப்படுபவர்கள். எனவேதான் ஒன்றுபடுமாறு அனைவரையும் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். எங்களுக்கிடையில் அபிப்பிராய பேதங்கள் உண்டு. ஒரே குடும்பத்தில் உள்ளவர்களுக்கிடையிலும், ஒரே பொருள்பற்றி அபிப்பிராயபேதங்கள் இருக்கலாம். ஆயினும், நாம் அனைவரும் இணக்கத்துக்கு வரக்கூடிய விடயங்கள் இருக்கின்றன அங்ஙனம் எல்லோருக்கும் சம்மதமான இந்த விடயங்களை நிறைவேற்றுவதற்காக நமது ஆற்றல் அனைத்தினையும் பயன்படுத்தி, ஒன்றுபட்டுப் பணிபுரிய வேண்டும்.

இத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் விதந்துரைக்கப்பட்ட பலவற்றை நாங்கள் இன்று நிறைவேற்றுவதற்குத் தொடங்கியுள்ளமை உங்களுக்குத் தெரியும். 5 ஆண்டு காலம் நீடித்திருந்த அவசரகாலச் சட்டத்தை நான் நீக்கிவிட்டேன். சிறையிலிருந்த 1800 பேர்களை விடுதலை செய்தேன். ஏன்? கலந்துரையாடல் மூலமும், பேச்சு வார்த்தைகளின் மூலமும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வாய்ப்பு அளிப்பதற்காகவே அவ்வாறு செய்தேன். ஆனால் நிலைமை மோசமடைந்தது. அதனால் அவசரகாலச்சட்டம் மீண்டும் அமுலுக்கு கொண்டுவர நேர்ந்தது. அங்ஙனமாயினும் இவற்றுக்கு ஏதுவான காரணங்களைக் கண்டறிந்து பிரச்சனைகளைச் சமாதானமாகத் தீர்க்கும் முயற்சியை நாங்கள் கைவிடவில்லை. இன்று நமது பாதுகாப்பு படைகளும், நமது பொலிசாரும் கடமைக்கே தங்களைத் தியாகம் செய்து கொண்டவர்களாகச் சேவையாற்றி வருகின்றனர். பாதுகாப்புப் படைகளும், பொலிசாரும் இந்நாட்டு மக்களின்

பாதுகாவலர்களாவர். இன்று போராளிகள் ஆயுதம் ஏந்தியவர்களாக இருக்கின்றார்கள். இன்று அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் ஆயுதப் பாதுகாப்பு இருக்கின்றது. இன்று முப்படைகளும், பொலிசாரும் ஆயுதம் ஏந்தியவர்களாக இருக்கின்றார்கள். ஆயினும் அப்பாவி வறிய மக்களுக்கு ஆயுதப் பாதுகாப்பு இல்லை. அப்பொதுமக்களின் பாதுகாப்புக்காக நமது பாதுகாப்புப் படைகளும், பொலிசாரும் பணியாற்றி வருகின்றார்கள். அவசரகால ஒழுங்குவிதிகள் அமுலுக்கு வரும்போது நாட்டில் வழமையான சட்டவிதிகள் அமுலில் இருப்பதில்லை. எனவே, குறைபாடுகள் ஏற்பட இடமுண்டு. தவறுகள் ஏற்பட இடமுண்டு. அதனைத் தடுக்க முடியாது. அப்படியாயின் அதனைத் தடுப்பதற்கு அவசரகால சட்ட நிலையினை நீக்கவேண்டும். அப்பொழுது இராணுவம் படை வீடுகளுக்குச் செல்லும். பொலிசார் வழமையான கடமைகளை மேற்கொள்வர். இராணுவத்தினரும், பொலிசாரும் பொதுமக்களைப் பாதுகாப்பதற்குக் கடமையைப் புரிவர் என்பதை நாம் தெரிந்து கொள்ளல் வேண்டும். இதனால் தான் அவசரகாலச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு நான் எப்பொழுதும் எதிர்ப்பினைக் காட்டி வந்துள்ளேன். இந்த முறையிலும் நான் அந்தச் சட்டத்தைப் பெரிதும் விருப்பமின்றியே அமுலுக்குக் கொண்டு வந்தேன். எனவே தான் நான் பதவிக்கு வந்தவுடனேயே அவசரகாலச் சட்டத்தை இரத்து செய்தேன். அவசரகாலச்சட்டத்தை இரத்து செய்வதைச் சிலர் தடுத்தபோதிலும் நான் அதனை நீக்கி விட்டேன். பொதுமக்கள் இயற்கையாகவே பண்பாளர்களாகவும், சீராளர்களாகவும் இருப்பர் என்பது எனது நம்பிக்கையாகும். அவர்களுக்குள்ள இச்சீரான பண்புகளை நம்பி நடவடிக்கை எடுப்பதற்குத் தான் நான் எப்பொழுதும் முயன்று வந்துள்ளேன். நான் பதவிக்கு வந்ததும், அத்தகைய கொள்கையினைச் செயல்படுத்துவதற்காகவே தான். எனது 6 ஆண்டு காலத்தில் இந் நாட்டில் குறைந்த பட்சம் பத்து இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவேன் என நான் கூறியுள்ளேன். இத் தொழில் வாய்ப்புகள் அமய அடிப்படையில் அமைந்தவைகள் அல்ல. நேரடித் தொழில் வாய்ப்புகள் ஆகும். இந்த வேலைத் திட்டத்தின் வண்ணம் வருகின்ற 6 ஆண்டு காலத்தில் இத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். அப் பணியினை நிறை வேற்றுவதற்கு எனக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தான் நான் கூறினேன். அத்தொழில் வாய்ப்புகள் பல ஏலவே வழங்கப்பட்டு வருகின்றன. இன்று 25,000 ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. பொலிசு சேவைக்காக ஏராளமானோரை அமர்த்திக் கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளிலும்

தேவைக்கேற்றவாறு தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. நாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக நாங்கள் எடுக்கும் முயற்சி உங்களுக்குத் தெரியும். அதனைப்போன்று அரசியல் கட்சி பாகுபாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது எனது கொள்கையல்ல.

எனது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரம் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படுவதாக எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் குறிப்பிடவில்லை. தகைமைகளுக்கேற்பவும், தேவைகளுக்கேற்பவும் தொழில்களை வழங்குவதற்கு நான் பணித்துள்ளேன். ஒருவர் பின்பற்றும் அரசியல் கொள்கைகள் தொழில்களைப் பெறுவதற்கு தடையாக இருக்கமாட்டா. தகைமைகள் இருப்பின் அவர்கள் அனைவருக்கும் உத்தியோகம் பார்க்கும் உரிமை இருத்தல் வேண்டும். தொழில்களை வழங்கும்போதும் அரசாசங்கத்தின் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆட்களை அமர்த்தும்போதும், காணிப்பகிர்வின்போதும் தகைமைகளுக்கேற்பவும், தேவைக்கேற்பவும் ஆட்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். இந் நாட்டின் மொழிப் பிரச்சனைக்கு எமது அரசாங்கத்தின் பதவிக் காலத்திலேயே தீர்வு காணப்பட்டுள்ளது. இன்று சிங்களமும், தமிழ் மொழியும் அரச கரும மொழிகளாக இருக்கின்றன. ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கின்றது. குடியுரிமை சம்பந்தமாக நிலவிய பிரச்சனைகள் யாவும் தீர்க்கப்பட்டு விட்டன. இனவிகிதாசாரத்துக்கு ஏற்ப தொழில் வாய்ப்புகளை வழங்குதல் இன ரீதியாக நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கையாகும். காணி விநியோகிக்கும்போது அக் காணிகளை அபிவிருத்தி செய்யும் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு முதன்மை அளிப்பது எமது கொள்கையாகும். இங்ஙனம் பிரச்சனைகள் பலவற்றுக்கு நாங்கள் தீர்வுகளைக் கண்டுள்ளோம்.

நம்நாட்டுப் பிள்ளைகளின் குறைவூட்டத்தை இல்லாதொழிப்பதற்கு. அவர்களுக்குப் பகலுணவு வழங்கப்பட வேண்டுமென நான் எண்ணினேன். அந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை ஆரம்பிப்பதற்கு 20,000 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களைத் திறப்பதற்குத் தடையாகவிருந்த பிரச்சனைகளை உயர் கல்வி அமைச்சர் கண்டறிந்து தனது சிபாரிசுகளை அரசாங்கத்திடம் சமர்ப்பித்த போது அவற்றை நாம் அமுலாக்கி உள்ளோம். செய்யக்கூடிய எல்லாவற்றையும் நாங்கள் செய்துள்ளோம். இலங்கையில் பதவிக்கு வந்த எந்த அரசாங்கமும் இத்தகைய சிறிய காலத்திற்குள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தினுல் முன்வைக்கப்பட்ட வேலைத் திட்டங்களை இவ்வளவு விரைவாக

அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையென நான் எண்ணுகின்றேன். இத்தகைய இடர்களுக்கு இடையிலும், நெருக்கடிகளுக்கு இடையிலும், அச்சுறுத்தல்களுக்கு இடையிலும் அந்த வேலைத் திட்டங்களின் அமுலாக்கத்தை அசட்டை செய்யவில்லை. நமது நிகழ்ச்சித் திட்டத்தை நாம் தொடர்ந்து அமுலாக்கி வருகின்றோம். அது பின்வாங்குவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

நீங்கள் அனைவரும் இச் செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, தலைமை தாங்குபவர்களாக இருக்கின்றீர்கள். இன்று நாம், நமது பிரச்சனைகளுக்கு நாமே தீர்வுகளைக் காணல் வேண்டும். அல்லாவிடின் வெளிநாட்டுச் சக்திகள் எங்களை அடிமைப்படுத்திக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே தான், வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும், மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் எங்களோடு ஒன்றுசேருமாறு இடைவிடாது நான் அழைப்பு விடுக்கின்றேன். நமது கருத்தியல்வாதங்களைப் பேணிக் கொள்ளும் அதேநேரத்தில் நம்மால் தீர்க்கக்கூடிய பிரச்சனைகளை நாமே தீர்த்துக் கொள்வோம். அவற்றை அங்ஙனம் தீர்க்காவிடின் வெளிச்சக்திகளுக்கு நாம் அடிபணிய வேண்டிவரும். சற்று சிந்தித்துப் பாருங்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இந்த அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளுவதற்கு வருவார்கள் என எதிர்பார்த்தவர் யார். அவர்கள் இப்பொழுது பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதோடு அல்லாமல் எங்களுடன் பலவிடயங்கள் பற்றியும் சமரச இணக்கத்துக்கும் வந்துள்ளார்கள்.

பேச்சுவார்த்தைகளின் மூலமும், கருத்துப் பரிமாற்றத்தின் மூலமும் இணக்கத்துக்கு வர முடியாதவற்றைத் தவிர்த்து விட்டு இணக்கத்துக்கு வரக்கூடிய விடயங்கள் பற்றிய இணக்கத்துக்கு வந்து நாம் சுயசக்தியினைக் கொண்டு நிமிர்ந்து நிற்றல் வேண்டும். இல்லாவிடின் வெளிச்சக்திகளுக்கு நாம் மீண்டும் அடிபணிய வேண்டிவரும். போர்த்துக்கேயர்களுக்கும், ஒல்லாந்தர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் நாம் அடிபணிய நேர்ந்தது நமது அடிமை மனப்பான்மை காரணமாகத் தான். அபிப்பிராய பேதங்களுக்குட்பட்டவர்களாய், பிளவுபட்டவர்களாய் ஒற்றுமையை இழந்து, நமது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வல்லமையற்றவர்களாய் இருந்தோம் என்பது நமது வரலாறு ஆகும். அந்த வரலாற்றை நாம் மாற்றியமைக்க வேண்டும். ஏன் மாற்றியமைக்க முடியாது? யதார்த்த நிலைக்கு ஏற்ப

இணக்கத்துக்கு வரக்கூடிய அளவுக்கு இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு நமது நாட்டினையும், நமது மக்களையும் பாதுகாப்போமாக.

நம்நாட்டுத் திணைக்களங்களின் நிருவாக முறைமையினை, வீண்விரயமும், ஊழலும் அற்ற நிலைக்குக் கொண்டுவந்து பொதுமக்களுக்குத் தமது பிரச்சனைகள் தொடர்பில் எளிதில் தீர்வைக் காணக்கூடியவாறு, புதியதோர் நிருவாகத்தை உருவாக்க ஆவன செய்யுமாறு உங்களை அன்புடன் வேண்டிக்கொண்டு விடை பெறுகின்றேன்.

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

# ADDRESS BY HIS EXCELLENCY, R. PREMADASA PRESIDENT TO SECRETARIES, HEADS OF DEPARTMENTS & CHAIRMEN OF CORPORATIONS AT THE SRI LANKA FOUNDATION INSTITUTE ON 6TH SEPTEMER, 1989

As you know, this Government was elected by the people of this country in February this year. In fact, it was in December last year, that the Presidential Election was held. I took my oaths as President on January 2. After the General Elections of February, it was in March that Parliament was inaugurated. And, it was thereafter that the Budget was passed. One may say, that it is exactly six months since our Government started work.

During this period, I have had occasion to meet Secretaries of Ministries and Secretaries to Honourable State Ministers several times. In addition, Cabinet Ministers in-charge of various Ministries have also met the Heads of different Departments, Corporations and Institutions. These meetings are held to explain to you, who are the pilots of this Administration, the tasks the people have assigned this Government. That is why we thought of meeting you who are in-charge of Departments, Corporations, Organisations and Institutions. It is our intention to carry the message through you, to your Departments and Organisations, to the country at large. Why do I say so? The extent to which we can make a success of our programmes depends on the extent to which you, who, as the pilots of our Administration, understand the aims and aspirations of the Government.

I, as the President, and the Prime Minister and the other Ministers, consider our people as our masters. That is the prime characteristic of a democratic administration. What stands to the discredit of a totalitarian administration is, that in such a system, the rulers are the masters — the people become those ruled. Our belief is that the people are the masters under a democratic system.

It is the people who elect a Government in accordance with the Constitution. We conducted the Presidential Elections amidst various difficulties and numerous problems. Nevertheless, the people exercised their franchise despite many difficulties.

During the Presidential Elections, the people went to the polling stations and cast their votes suffering physical harassment and torment and in some cases even sacrificing their lives. At the Presidential Election around 55% of the population cast their vote. The other day when I mentioned this to a Member of the American Congress, he said that at the American Presidential Elections, only a relatively small number exercised their franchise, that is around 45% to 48%. However, despite all these difficulties 55% of the population came and voted. At the Parliamentary Elections — the General Elections — 63% cast their votes.

They are our masters. We were elected on the strength of the Election Manifesto put forward by us. I have this Manifesto with me. This Manifesto is with me all the time. We placed this Election Manifesto before the people in all three languages. It was on the strength of this Manifesto that the people elected us. Therefore, it is our duty to implement this Manifesto.

We formulated this Manifesto since August 1988. It was not only the views of U.N.P. Organisations that we obtained for the preparation of this Manifesto, but also the views of the common masses and outside Organisations. We placed before the people, both the strong and the weak points of the administration since 1977. This Election Manifesto was prepared after ascertaining the views on its future implementation. The Election Manifesto was formulated on the basis of our knowledge and experience. If there were any theories we held onto tenaciously, these were but a few.

We obtained this mandate from the people as a group which had a proper understanding of the issues and which could adapt itself suitably. The belief which we unswervingly held onto was the soverignty of Sri Lanka. We will not permit the destruction of our independence. Nor will we betray Sri Lanka's territorial integrity, untiy as well as the heritage and human rights of the people. We not only enshrined in our 1978 Constitution these human and fundamental rights of our people, but also ensured, that they are justiciable in the courts of law, if such rights are violated. Those were the strict principles we are prepared to implement — pragmatic programmes of work after looking into the issues involved from time to time, for the welfare of the people, be it in the field of politics, economic and socio-cultural development.

The world is constantly changing. Man is also in a constant state of change. In an ever changing world, we too have to adapt ourselves. We must understand the current situation and change. New problems require new solutions. Old solutions will not suit new problems. We drafted this Election Manifesto after studying and understanding the true situation. We found out what is required for our economic development. We saw that there were many obstacles. Among them were corruption, waste and administrative lethargy. Problems remained unsolved, while the files piled up in offices. While a file on the digging of a well would expand in size, not even a sod of soil would have been cut to dig that well. We found that this type of administrative problem, waste, corruption and inefficiency were prevalent in our administrative machinery. That is why, soon after we were elected to office, I held a series of meetings with Secretaries of Ministries and Heads of Departments and prevailed upon them, to make use of their experience, to avoid waste and improve efficiency of the services, in order to accelerate the pace of work.

A large majority of our people live in slums and shanties in villages and urban areas. 85% of our people live in the villages. We must work to uplift their living standards. Half our population live on foodstamps. It is these people who trekked to the polling booths early morning to cast their vote, despite facing threats to their lives and bodily harm. It is for this reason that we have always been saying that we must understand

the problems of these people and their aspirations. We have been used to the practice. We judge public opinion by the opinion of the upper strata of society because of the limited opportunities we have in meeting the common people after we are appointed as Ministers, Heads of Departments etc.

Several lakhs of our people do not have an opportunity of reading the newspapers. Some do not have the time to listen to the radio. They do not have the economic capacity to own a television. We must understand the thinking and the aspirations of these people. We must not treat as public opinion, the opinion of a few previleged people in the upper strata of society. We must change our attitudes accordingly. Poor people come to a Ministry or a Department with the greatest difficulty to get their work done. We must provide these people every facility to get their work done. At present, these people have to encounter various delays, take circuitous routes and fill several forms etc.; to get their work done. I have at previous discussions with Secretaries and Heads of Departments, prevailed upon them, to reduce as far as possible, the number of forms a person has to fill for a particular item of work. How many files have we got to maintain to keep these forms? We are merely fattening files. Due to various unnecessary procedures, what percentage say of a lakh of rupees voted for a road, would actually go to the construction of the road? Invariably 60% of the monies would be eaten up by corruption and waste. We have always insisted that we must ensure at least 75% of the monies voted are used in a project. Therefore, I will appeal to you to work with dedication and devotion to your work. Let us not forget that we are paid by our masters — the people with funds earned through their sweat and blood. If we receive any salary or perquisite it is through the hard work of the poor innocent people. They have provided our comforts while living on food stamps themselves. It is our duty to look after them. It is also our duty to enable them to get their needs attended to expeditiously without any inconvenience.

We have to increase local production. We have a fertile soil. We have a salubrious climate. We have an able people. Let us make use of these people to nurture our fields of production. Let us use their labour for agricultural and industrial production and get their participation to increase local produc-

tion. If production does not increase, the salaries and emoluments drawn even by our top level officers, will not be sufficient for them to make ends meet. If one wants to bring down the cost of living and reduce the pace of inflation and pay for consumer goods, the real value of money, then one must increase production. We can produce in our own country 95% of our food, clothing and other requirements. The necessary atmosphere for this purpose has been created by our Government since 1977. We have done an immense amount of work since 1977 in the fields of basic amenities, irrigation facilities, power and energy, roadways, local and foreign markets and large industrial projects. What is now required is to get the participation of the people to speed up the pace of production, especially in regard to the local production of food, textiles and other requirements which we had carried out during that period. It is for this reason that we planned "Janasaviya". It was not meant as a dole. So long, we have forgotten, we have ignored, the more than 50% of our people who live on food stamps despite their wealth of labour. Our people are our most valuable asset. The fault is that we are not making use of them for any worth-while task. It is to put aright that fault, that Janasaviya was prepared. It aims at getting the people's participation for production.

First, provide the people with the necessary nutrition for their physical well-being. Thereafter, let the people provide the nutrition necessary for increased production.It is only in that way, that the country's economy can be strengthened and the income of the income-earners can be raised and a better standard of living can be assured. As you know, without any production, no amount of salary increases will ever bring down the cost of living. In fact, it will only increase inflation.

This is one of the most important policies of our Government — that is the speeding up of the pace of production. The first thing to be done is, make the State Administration efficient. For that purpose, prevent corruption and waste. Provide for the people to get their needs attended to, without bother. Next, speed up and improve and extend production. Then, get the people involved in the production process.

If you look at it in this light, you will see what a meaningful Election Manifesto this is. All of you have the freedom to

implement those policies. Give your minds to the needs and requirements of each area, according to your own experience and consideration. This can be done only to the extent to which our administration is decentralised. Our system of administration should be decentralised right up to village level. What remains centralised should be extended far more. The people should be able to feel, that if they are truly the masters — the rulers — the administration has come to their very doorstep. It is to make a success of this programme that the concept of 30,000 small villages was included in Janasaviya. According to our Election Manifesto, the Janasaviya was to begin one year after our Government was formed. But, we will not wait that long. We will begin it at the end of this month — September. We intend to implement it throughout Sri Lanka in 11 stages.

In the first stage, we will be selecting one AGA area from every district in this country. They will be the AGA area with the largest number of poor people — the largest number of food stamp owners. In the next stage, it will be the next AGA division of each District. By the time the eleven stages is over, all AGA Divisions would have come into the scheme.

The people subsisting on food stamps will receive a monthly grant of Rs. 2,500 of which Rs, 1,458 will be for consumption and Rs. 1,042 for saving. During this period these people will be introduced to various fields of production at small village and hamlet level, in accordance with their talents, and inclinations. It may be that their interest lies in trade or agriculture or industry. The budding youths in these families would be provided with a training in various fields, depending on their individual wishes and capabilities. Every Ministry will be involved in this programme. To make this a success, every officer in every Ministry and every Department — in fact all officers throughout the country should understand this concept and remove whatever administrative obstacles that might emerge.

If we succeed in implementing this programme during these first two years, there will be a notable transformation in our country's economy. I now find that many people seem to be scared thinking that the economy is strained, that it is facing a crisis. This disease has many symptoms. If one were to

treat the symptoms, one would have to keep on patching up here and there. We have discovered the root of the disease. It is that, that has to be treated. Production is the treatment, and it should be speeded.

During the past eleven years, we prepared the foundation for it. Now we have to implement that programme with the participation of the people. Its success rests on administrative efficiency, avoidance of waste and prevention of corruption. Every one of us in the Public Service, Corporation Services and Local Government Services who earn a salary, will have to work with utmost dedication. It is only then, that all of us would be able to feel satisfied with the results. However, you will know that there is a situation of terror these days. All kinds of acts of sabotage are taking place. What you have to decide is, whether you are going to succumb to it or whether you are going to overcome it. This too is an administrative skill.

Someone will get a telephone call asking him not to go to work. That person will not only not go to work, but also inform others too not to go to work. But, they also expect to get paid for days not worked. But who pays them? It is those innocent people who earn for the country through their sweat and toil. They do not come to work because they had received a letter. Please consider this position. All of us should dedicate ourselves to the service of the people. Consider what would happen, if we allow ourselves to be cowed down with this type of fear.

Who will know, when death would come to us? Who will know, whether you will meet with an accident or not? Sometimes your horoscope will predict, that you will meet with a fatal accident while travelling in your car. You will have to then decide, whether you would travel in your car or not. So you have an option. Come what may, you go to work or stay at home. Similarly, you can go to work whatever happens to you. Or you can stay at home. These incidents which you fear may occur, would actually come to pass. Or it may not come to pass at all. That is life. Do we submit to these threats or do we overcome them by united action? This is the challenge before us.

Just think about this. If work is stopped at the point of a gun, the day the gun emerges victoriously and rules the country, you will have no option but to work at the point of a gun. There would then be no A.R.R., F.R.R., trade union rights, human rights or reasonable demands. At the point of a gun you may have to work not for eight hours, but for 24 hours. There would then be no demonstrations. If we submit to these threats, we are not suited to hold our positions.

There is a vast section in our administrative service, who look up to you for guidance and follow you. Some will say "If the boss does not go to work why should I? Your subordinates will look to you for guidance. You should set an example to them. Even during normal times, the one who goes to office first is the most minor employee. It is he who has been entrusted with the job of closing office and handing over the keys to the police. This is wrong. This pattern should be changed. The Departmental Head should be the first to go to Office. He should give leadership. Such is a person whom one can call a 'Boss.' So the leadership and example you give, counts a lot. It is you who should go to office first. You have the vehicle and other facilities. If you do not go to office, how do you expect your employees who travel by bus or walk long distances to come to work? If you foresee a distruption of transport services you could talk to officers who have vehicles and arrange to transport some others who could be easily picked up and brought to work. We need that kind of efficiency and thinking, if we are to progress towards prosperity. We do not need advisers from International Agencies to guide us on these matters. There are no better advisers than you. You know how other countries who were poor have developed.

There are several officials who have gone abroad for scholarships, training programmes, seminars and so on. I have during the past eleven years, approved the applications of Departmental Heads who went abroad on scholarship. Therefore, I am aware of the number who have gone abroad. They say they are going to attend this conference and that seminar and keep going abroad seven or eight times an year. So I have told the Prime Minister, that if an officer in a department applies to go abroad more than once an year, to approve such an

application after consulting me. I will study what the particular officer wants what he had learned abroad and to what extent he had applied that knowledge for the country's benefit.

What do those who reported for work despite all threats tell me? "This is quite funny Sir. Others draw bigger salaries to enjoy better privileges, go on foreign trips more and more, but we just break our backs. We have none to lead us in a crisis". I know that you have difficulties. There are times when your families shiver in fear. There have been times when threats have been carried out. Therefore, we have to choose one of the two alternatives. Either we have to come and work or stay at home, afraid. Choose what you want and inform your Minister or the Head of your Department. I know how to fill the resulting vacancies. Do not think for a moment that I have taken this job to run away scared. Let me tell you that I will lift this country out of the plight it has fallen into. I intend to take every step necessary for that purpose.

Take a look at my Election Manifesto. The first thing I refer to is Peace. The second is Discipline. Then comes Prosperity — through Discipline brought about through Peace. How am I going to do it? Not by the gun or the bayonet. But by discussion. By consultation. Please keep in mind that I will do it. There are some who say that this will not do, that one must be firm in meeting firmness. But they are the same people, who do not come for work. There are some people who do not come for work but stay at home and keep on making false telephone calls on the pretext of working more. Sometimes, they do it in the Department itself, speaking from one corner of the building to another corner of the same building, saying 'Don't report for work tomorrow. You will be killed if you come'.' Several of them have already been caught. So this spreads. False letters arrive spreading the rumour. So, no one comes to work on that day.

The first to keep away from work is the Head of the Office. The next man next. And then the next. Is it for this that they are paid top salaries? Is it for this that you received so many degress? Is it for this that you were given a training? Choose one of the two alternatives. Decide whether you want to serve the people and be maintained by the people, or whether to remain shivering in fear.

I agreed to come forward as the candidate of our party for the Presidential Elections, not without knowing the difficulties that I had to face. It is with an awareness of these difficulties that I did so. Therefore, I have a duty to perform. What is that duty? It is the mandate given to me by the people of this country, to take them out of the rut that they have fallen into. I have a good programme of work to bring about a remedy. If I receive your assistance for two years, you will realise what type of change that would be brought about in Sri Lanka. My programme of work would result in a unique transition. It is very easy for one to criticise and to put the blame on the others. Sometimes we do not realise our own mistakes. We do not make an attempt to understand how careless we are. Our habbit is always to put the blame on the other person. If someone else does something wrong we ask for his explanation, while we suppress our own faults.

Recently, a group of people came to see me. They said that they had an important subject to discuss with me. They told me that they were facing great threats and difficulties. At the same time they told me something which someone in their own division had done. According to them, someone in their office had signed the attendance register, but had told his superior, that although he signed that attendance register he was unable to perform his duties because he had received threats. Then the superior had told him, that if it was not possible for him to work he would make it a point to note down in the attendance register that, that person did not work. Hearing this, he had agreed to work. The rest of the employees of the organisation too followed suit. As a result, 75% of the workers in that institution had performed their duties. This is what we call leadership. I also heard of a great example, given by a lady judicial officer. When she went to her place of work, an accident similar to what I related, had taken place there. A certain officer in her courts had said, that although he signed the attendance register, he could not work. This lady had been very firm. She had said, that she would not postpone the hearing of cases on any account. This lady had added "whether I die here or on the road or at home, it would be the same to me. I have come to do a job of work. Therefore, I will not hesitate to perform my duties." This is undoubtedly a great example. I have come to learn hundreds of such courageous acts.

Therefore, you must give the leadership. You are either Secretaries, Heads of Departments or Heads of Corporations. If your leadership is not forthcoming at a time like this, at what other time would you give your leadership? If you cannot give that leadership, in the name of God, give the job to some one else and go away. There is no fault in that. It is only reasonable. If one head cannot perform the work, the next in command could be appointed.If not the second, the third most senior officer. Work must go on. Therefore, perform your duties. This is not what I say but what the people of this country — our masters — would like me to tell you. I am only an instrument in the hands of the people. I have been entrusted with the responsibility of undertaking this duty. I accept that responsibility to convey to you that message and perform my tasks entrusted to me.

We must always keep in mind, that there is a reaction to every action we do. I remember, once a group involved in a strike wrote me a letter. This letter was sent by post. After two weeks, a caller telephoned me and asked whether I had received that letter. I asked, when he had sent that letter. He said that he had sent it two weeks back. I said it could not happen because I am in the habbit of replying every letter. In my reply I always state, whether I could accede to the request contained in the letter or not. I then said, that the letter would have got delayed in the post. It was only then, that the caller realised, that they had involved the Postal Department in the strike. I told him, since, they had called the Postal Department in to a sympathy strike, the letter would still be in the mail room. This was a reaction to their action. I told the caller, that they had to take the responsibility of the consequences.

We must educate the people who work with us. Therefore, I would like to tell you, we should not be afraid to do what is right. We are all dedicated to do what is just. We also should not seek solutions through fear, but we should not be frightened to find solution. Fear and doubt are the two most dangerous diseases, if you allow them to take hold of you. We cannot help it if we face intimidation or difficulties, in discharging our responsibilities.

We are gathered here, suppose this building collapses or a hand grenade is thrown, what would happen? Grenades were

thrown at us when we were holding a meeting in Parliament. Our Ministers and MPs were injured. Some of them died. Did we abandon the work as a result? We cannot do that. We have a duty to perform by our people. It is the people who maintain us. Therefore, I wish to inform you, we must work with determination.

The present Government has been given a mandate to implement the election manifesto. The most important aspect of the manifesto is, the Poverty Alleviation Programme, to reduce poverty or take measures to completely eradicate poverty. The only way to do it is, increase production, which too is stipulated in the manifesto. People must be made participants in this development effort. The basic facilities needed for this effort have been set up by our own Government during the past 11 years. We should completely eradicate waste, corruption and inefficiency if we are to alleviate poverty. We should give an example in this respect.

If a situation of conflict has come about, we must find out the causes for it. That is the responsibility of the Government. We will attempt to do it and will achieve it. We will find the causes of the conflict. That is why I have always asked to work with an open mind and be non-aligned. It is not only the Ministers and MPs who face difficulties. That is why I ask everyone to unite. We have differences of opinion and disagreements amongst us. Even in a family there may be conflicting opinions among its members. But there are matters on which everyone can agree upon. We can therefore put our heart and soul in order to work unitedly, towards achieving what we can agree upon.

You would see that we have started accomplishing most of the things we had stated in our Election Manifesto. I lifted the Emergency which was in force for well over five years and released over 1,800 persons who were in custody. Why did I do so? It is with a view to resolving our problems through consultation and compromise. Yet, the situation became worse. This resulted in my having to re-impose the Emergency. But, we have not given up our effort to diagnose the root causes for the present crisis and resolve them peacefully.

Today, our armed forces and police are working with great dedication. The Police and Armed Services are there to protect our people. Today, there are arms in the hands of the militants. Representatives of all political parties too are in possession of arms. The Police and Armed Services personnel too have arms. But the poor, ordinary people do not have arms to protect themselves. Police and the Armed Services personnel are there to protect the people. When Emergency is enforced, the Emergency Laws take precedence over the ordinary laws. There may be drawbacks and weaknesses. It can't be helped. The only alternative is, to withdraw the Emergency. Then the Services personnel will withdraw to the barracks and the Police will resume their normal duties. Police and Army are there to look after the people.

We must understand this position. That is why, I am opposed to the imposition of the Emergency. That is why I withdrew the emergency soon after I became President. I re-imposed the Emergency this time with the greatest reluctance. I lifted the Emergency despite the advice of some, not to lift the emergency. I always place my trust in the good sense of the people. I try to look at the good side always. I came forward to implement such a policy and vision. I pledged to create at least one million jobs during my six year period in office. Not casual jobs, but permanent jobs. If we pursue this programme, we can achieve this target. I asked that I be given this opportunity to implement this programme. These opportunities are now being created. Steps have been taken to recruit 25,000 teacher trainees. A large number are being recruited to the Police. We have created job opportunities in various sectors. You will see the attempt we are making to honour the pledges we have given. My policy is to work without any political bias.

My Election Manifesto does not say that jobs will be given only to members of my party. I have ordered that jobs be given on basis of qualifications and necessity. One's political leanings is not a qualification or a disqualification. If a person is suited to a particular job he should be chosen. Qualification and need should be the criteria, whether it be in the matter of employment, any government programme, or allocation of

Printed at Sathosa Printers Limited, Published by the Presidential Press Secretariat.